விலை: 50.00
பக்கங்கள் : 16

website : www.valampurii.lk
viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 25

ஒலி 203 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 25 செவ்வாய்க்கிழமை (09.07.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829







## பதில் வைத்திய அத்தியட்சகர் அர்ச்சுனாவுக்கு ஆதரவாக

# சாவகச்சேரியில் ஆயிரக்கணக்கானோர் ஒன்றுகூடி எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்






*(சாவகச்சேரி)* சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் பதில் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் அர்ச்சுனாவுக்கு ஆதரவளித்து நேற்று திங்கட்கிழமை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை முன்பாக ஆயிரக்கணக்கான பொதுமக்கள் ஒன்றுகூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். *(16ஆம் பக்கம் பார்க்க)*

## சாவகச்சேரி வைத்தியசாலை விவகாரம்

# மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்ற நடவடிக்கை

### அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை விவகாரம் தொடர்பில் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள், மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் வகை 15

## கொழும்புக்கு அழைக்கப்பட்டார்

# வைத்தியர் அர்ச்சுனா



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் பதில் அத்தியட்சகர் வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனா கொழும்புக்கு அழைக்கப்பட்ட நிலையில் வைத்தியசாலை விடுதியில் இருந்து வெளியேறினார்.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் பதில் அத்தியட்சகரை, 15

## ஆனைக்கோட்டையில்

# நடைபெறும் தொல்லியல் ஆய்வு



11

## அதிபர் - ஆசிரியர்கள் இன்று சுகவீன விடுமுறைப் போராட்டம்

### கல்வி நடவடிக்கைகள் பாதிப்படையும்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் இன்று சுகவீன விடுமுறை தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட உள்ளதாக அதிபர் - ஆசிரியர் தொழிற்சங்க கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் இதனை அறிவித்துள்ளார்.

சம்பள பிரச்சினை உள்ளிட்ட ஏனைய சில பிரச்சினைகளுக்கு 15

## சம்பளம் அதிகரிப்பதாயின் வரி அதிகரிக்க நேரிடும்

### திறைசேரி செயலாளர்



(கொழும்பு)

வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு வழங்கப்படுமாயின், தற்போதைய 18% வற் வரியை 20% - 21% ஆக அதிகரிக்க நேரிடும் என திறை 15

## அனைத்துப் பாடசாலைகளிலும்

# கல்வி நடவடிக்கைகள் இன்று இடம்பெறும்

### கல்வி அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் அனைத்து அரச பாடசாலைகளிலும் இன்று கல்வி நடவடிக்கைகள் வழமை போன்று இடம்பெறும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

நாடளாவிய ரீதி 15

## துப்பாக்கிச்சூடு இருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

அத்துகிரிய நகரில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் இருவர் உயிரிழந்துள்ளனர். மேலும் 6 பேர் காயமடைந்துள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டில் பலத்த காயங் 15

## அரச ஊழியர்களின் சம்பளப் பிரச்சினைக்கு

# அடுத்த வரவு செலவுத் திட்டத்தில் தீர்வு வழங்க முடியும்

### நிதி இராஜாங்க அமைச்சர்



(கொழும்பு)

அரச ஊழியர்களின் சம்பளப் பிரச்சினைக்கு அடுத்த வருட வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள்மூலம் தீர்வுகளை வழங்க 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலையில் முன்னெடுக்கப்படும் சட்டவிரோத சிங்களக் குடியேற்றங்கள்

## அண்ணாமலையுடன் சிறீதரன் எம்.பி கலந்துரையாடல்




மறைந்த தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவர் இரா.சம்பந்தனின் இறுதிக் கிரியைகளிற்காக வருகை தந்திருந்த பாரதிய ஜனதா கட்சியின் தமிழ்நாடு மாநில தலைவர் கே.அண்ணாமலை தமிழரசுக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனுடன் விசேட சந்திப்பொன்றை நடாத்தியுள்ளார்.

சந்திப்பானது, நேற்று முன்தினம் திருகோணமலையில் உள்ள கிழக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றுள்ளது.

சந்திப்பில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனுடன் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் பங்கேற்றுள்ளார்.

எதிர்கால அரசியல் கள நிலைவரம் மற்றும் திருமலையில் முன்னெடுக்கப்படும் சிங்களக் குடியேற்றங்கள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை திருகோணமலையில் இரா.சம்பந்தனின் இறுதிக் கிரியை நிகழ்வில் கலந்து கொள்ளவதற்காக பாரதிய ஜனதா கட்சியின் தமிழ் நாடு மாநில தலைவர் கே. அண்ணாமலை இலங்கை வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)



வவுனியா பல்கலைக்கழகத்தின் இரண்டாவது துணைவேந்தராக பேராசிரியர் அருளம்பலம் அற்புதராஜா நேற்று தனது கடமைகளை பொறுப்பேற்றார்.

வவுனியா பல்கலைக்கழகத்தின் தகவல் தொழில்நுட்பப்பிரிவு மண்டபத்தில் பதிவாளர் நடராஜா ராஜவிசாகன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

வவுனியா பல்கலைக்கழகத்தின் வேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் த.மங்களேஸ்வரன், பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள் உள்ளிட்ட பல்கலைக்கழக சமூகத்தினர் இதன்போது பிரசன்னமாகியிருந்தனர்.

## வெளிநாட்டு சிகரெட்டுக்களுடன் பதுளையில் ஒருவர் கைது

பதுளை பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றிற்கு அருகில் சுங்கவரி செலுத்தாமல் சட்ட விரோதமாக கொண்டுவரப்பட்ட வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் சந்தேக நபரொருவர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பதுளை, பதுளுபிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த நபரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காக பதுளை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ம-7)

## மோ.சைக்கிள் விபத்து ஒருவர் உயிரிழப்பு

(திருகோணமலை)

ஹபரனை - திருகோமலை வீதியில் சிங்ஹகம பகுதியில் இடம் பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக ஹபரணை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை மாலை இடம் பெற்றுள்ளது.

ஹபரனை நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று செலுத்துனரின் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி கவிழ்ந்ததில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது மோட்டார் சைக்கிள் செலுத்துனர் படுகாயமடைந்துள்ள நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஹிங்குராக்கொட, சிங்ஹகம பகுதியைச் சேர்ந்த 52 வயதுடைய நபரொருவரே உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹபரனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## கறுவா ஏற்றுமதியால் ரூ. 15 மில்லியன் வருமானம்

இந்த வருடத்தின் முதல் 6 மாதங்களில் கறுவா ஏற்றுமதி மூலம் 15 மில்லியன் ரூபா வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாக கறுவா அபிவிருத்தி திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறித்த காலப்பகுதியில் 60 மெட்ரிக் தொன் கறுவா ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாக அதன் பணிப்பாளர் நாயகம் ஜனக லிந்தர குறிப்பிட்டார்.

கடந்த ஆண்டு 251 மெட்ரிக் தொன் கறுவா ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## அடுத்த...

முடியும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு தரப்பினருக்கு மாத்திரம் தீர்வுகளை வழங்குவதன் மூலம் மேலும் பல பிரச்சினைகள் உருவாகும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரச அதிகாரிகளின் சம்பளத்தை ஆயிரம் ரூபாவினால் ஜனாதிபதி உயர்த்தியதாகவும், சம்பளத்தை மேலும் உயர்த்த வேண்டும் என தெரிவித்த அமைச்சர், அதற்கு இது சரியான தருணம் அல்ல என்று கூறியுள்ளார்.

மேலும், அவர் தெரிவிக்கையில், “2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளை ஒப்பிடும் போது, இலங்கையில் அரச அதிகாரிகளின் எண்ணிக்கை 02% இற்கும் கீழ் குறைந்துள்ளது.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக, அரச துறையில் ஆட்சேர்ப்பு செய்யப்படவில்லை.

புதிதாக பணியமர்த்தப்படுவதை விட, தற்போதுள்ள ஊழியர்களுக்கு மாத ஊதியம் வழங்குவதில் நெருக்கடி ஏற்பட்டது. எவ்வாறாயினும், அரசு அதிகாரிகளுக்கு சம்பளம் கொடுக்கப்பட்டது என்றார். (ம-7)


**NSA Group of Company (Pvt) LTD**


NSA Group of Company எதிர்வரும் 10ஆம் திகதி முதல் தனது புதிய கிளையினை கனடாவிலும் திறந்து வைக்க உள்ளது என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகிறோம்.

அன்பான வாடிக்கையாளர்களே!

- நீங்கள் விசிற் விசா (Visit visa) மூலம் கனடா வந்தவரா?
- அல்லது கனடா வருவதற்கு திட்டமிட்டுள்ளீர்களா ?
- உங்களுக்கு கனடாவில் தங்குவதற்கு வீடு இல்லை, வேலை இல்லை, என்ன செய்வது என்று அச்சப்படுகிறீர்களா?



இனி அந்த கவலையே உங்களுக்கு வேண்டாம்.
விமான நிலையத்தில் உங்களை வரவேற்பதில் இருந்து நீங்கள் தங்குவதற்கான வீடு, உங்களுக்கான வேலை, மருத்துவ வசதி மற்றும் PR பெறுவதற்கான சட்ட ஆலோசனைகள் என அனைத்து சேவைகளும் உங்களுக்கு ஒரே கூரையின் கீழ் வழங்குகின்றோம்.
உலகின் எப்பாகத்திற்குமான துரித கடிதங்கள், பொதிகள் இலங்கையில் நீங்கள் எங்கிருந்தாலும் உங்கள் வீட்டிற்கே வந்து பெற்று அனுப்பித் தரப்படும்.
அத்தோடு விசேட சேவையாக கனடாவில் வாழும் எம் உறவுகளின் கடிதங்கள் மற்றும் பொதிகள் எம் தாயக மக்களின் வீட்டிற்கே விரைவாகவும் நிறைவாகவும் கொண்டு வந்து தரப்படும்.



(1426)


தொடர்புகளுக்கு:

**NSA Group of company (Pvt) Ltd**
**Visa Consultant**
No.131, main street, Jaffna.
077 266 6429, 077 666 9958, 021 221 0969

**DHL Service Point**
No-197, Main Street, Jaffna.
077 877 4838, 077 877 6072
021 221 0599

**NSA Group of Companies INC**
5928 finch Avenue East.
Unit 207 Scarborough, Ontario,
M1B 5P8, Canada.
0014372200446


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org









சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையின் பதில் வைத்திய அத்தியட்சகர் இராமநாதன் அர்ச்சுனாவிற்கு ஆதரவு தெரிவித்தும் மருத்துவ மாபியாக்களை வெளியேறக் கோரியும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு முன்பாக பொதுமக்கள் மாபெரும் போராட்டம் ஒன்றை நேற்று நடத்தியிருந்தனர். குறித்த போராட்டத்தின் பதிவுகள் சில...

(படங்கள்: சுபேசன், சிவசாந்தன்)

# மாணவர்களுக்கான வட்டியில்லாக் கடன் திட்டம்

## கல்வியமைச்சு அறிவிப்பு


(கொழும்பு)

2022 ஆம் ஆண்டு உயர் தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு அரச சார்பற்ற உயர் கல்வி நிறுவனங்களில் கற்கைநெறிகளை தொடர்வதற்கு வட்டியில்லாக் கடன் வழங்கும் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அரச பல்கலைக்கழகங்களுக்கு நுழைவதற்கு வாய்ப்பு கிடைக்காத உயர் தரத்தில் சித்தியடைந்த மாணவர்களுக்காக இந்த வட்டியில்லாக் கடன் திட்டம் 2017ஆம் ஆண்டுக்கான பாதீட்டின் முன்மொழிவுகளின் படி நடைமுறைப்படுத்தப்படவுள்ளதுடன் அதில் அதிகபட்சமாக 8 இலட்சம் ரூபாய் வரை வட்டியில்லாக் கடனாகப் பெற முடியும்.

கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட 17 அரச சார்பற்ற உயர்கல்வி நிறுவனங்களில் 100 பட்டப் படிப்புகளை கற்பதற்கு 7 மாணவர் குழுக்களின் கீழ் உள்ள 17 ஆயிரத்து 313 மாணவர்களுக்கு ஏற்கனவே கடன் வழங்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது. (க-6)

# டிஜிற்றல் மயமாகும் பயணச்சீட்டுக்கள்



(கொழும்பு)

ரயில் சேவை உள்ளிட்ட பொதுப் போக்குவரத்துப் பயணச் சீட்டு விநியோகத்தை டிஜிற்றல் மயப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது என போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

இதன்படி இவ்வருட இறுதிக்குள் பொதுப் போக்குவரத்து பயணச் சீட்டுகளுக்கான டிஜிற்றல் விநியோக முறை அறிமுகப்படுத்தப்படும் என போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் ரஞ்சித் கங்கநாத் ரூபசிங்க தெரிவித்துள்ளார். (க-6)

# நீரில் மூழ்கி உயிரிழந்த மூன்று வயது குழந்தை

(கொழும்பு)

மூன்று வயதுடைய குழந்தையொன்று வீட்டின் நீர்த் தொட்டியில் விழுந்து நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக மீத்தெனிய பொலிஸார் தெரிவித்தனர்.

குழந்தையின் தாய் தனது ஒன்பது வயது குழந்தையையும் உயிரிழந்த மூன்று வயது குழந்தையையும் குளிப்பாட்டுவதற்காக வீட்டிற்கு வெளியே உள்ள நீர்த்தொட்டி இருக்கும் இடத்திற்கு அழைத்துச் சென்றுள்ளார்.

பின்னர் அவரது ஒன்பது வயது குழந்தையின் உடலைக் கழுவி வீட்டினுள்ளே அழைத்து சென்ற தாய் மூன்று வயது குழந்தையை நீர்த்தொட்டிக்கு அருகில் இருத்தி விட்டு சென்றுள்ளார்.

மீண்டும் வீட்டிலிருந்து வெளியே வந்த தாய் மூன்று வயது குழந்தையை தேடிய போது குழந்தை நீர்த்தொட்டிக்குள் விழுந்து கிடப்பதைக் அவதானித்துள்ளார்.

பின்னர் குழந்தை மீட்கப்பட்டு மீத்தெனிய மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி குழந்தை உயிரிழந்துள்ளதாக மருத்துவமனை அதிகாரிகள் தெரிவித்தனர். (க-6)

# இரசாயன கழிவுகளை அகற்ற 5 மில். டொலர் ஒதுக்கீடு

(கொழும்பு)

இலங்கையில் இரசாயன கழிவுகளை அகற்றும் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு சுற்றாடல் அமைச்சுக்கும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்திற்கும் 5 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியை உலகளாவிய சுற்றாடல் வசதிகள் நிதியம் வழங்கியுள்ளது.

கடுமையான விதிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்ட போதிலும் இந்த ஒழுங்குமுறைகளை நடைமுறைப்படுத்துவதில் திறன் இல்லாமையால் இரசாயன இறக்குமதிகள் தொடர்ந்தும் தவறாக நிர்வகிக்கப்படுவதாக இலங்கையில் ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தித் திட்டம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சியான இயற்கை மாசுபடுத்திகள் அல்லது பாதரசம் கொண்ட பொருட்களை இலங்கை உற்பத்தி செய்வதில்லை என்ற போதிலும் இந்த வகையான உள்ளீடுகளைக் கொண்ட பல பொருட்கள் ஒவ்வொரு ஆண்டும் பல்வேறு பயன்பாடுகளுக்காக நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-6)

# துப்பாக்கி பிரயோகம் ஒருவர் பலி-5 பேர் காயம்

(கொழும்பு)

அதுருகிரிய ஒருவல பகுதியில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் பிரபல வர்த்தகர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த துப்பாக்கிச் சூட்டில் பாடகி சுஜிவா உட்பட மேலும் ஐவர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் குறித்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் அதுருகிரிய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-6)

# மாணவர்களுக்கான ஜனாதிபதியின் புலமைப்பரிசில் திட்டம் ஆரம்பம்

(கொழும்பு)

முதலாம் வகுப்பு முதல் 11 ஆம் வகுப்பு வரையிலும் மற்றும் உயர்தரத்தில் கல்வி கற்கும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு, ஜனாதிபதி நிதியத்தின் மூலம் வழங்கப்படும் புலமைப் பரிசில்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் எதிர்வரும் 12ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த திட்டத்தில் ஒவ்வொரு வலயத்திலும் இருந்து 60 மாணவர்கள் தெரிவு செய்யப்படவுள்ளதாகவும் இதில் உயர்தர மாணவர்களுக்கு இரண்டு வருடங்களுக்கு மாதாந்தம் ஆறாயிரம் ரூபாய் விகிதம் வழங்கப்படவுள்ளதுடன் முதலாம் வகுப்பு முதல் 11 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு 12 மாத காலத்திற்கு மாதாந்தம் 3,000 ரூபாய் வழங்கப்படும் எனவும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (க-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்நியனான அபிஷேக் சர்மா அடங்கிப் போனது ஜிம்பாப்வே!



இரண்டாவது ரி-20 போட்டியில் அசத்திய இளம் இந்திய அணி 100 ரன் வித்தியாசத்தில் வென்றது.

ஜிம்பாப்வே சென்றுள்ள இளம் இந்திய அணி ஐந்து போட்டிகள் கொண்ட ரி-20 தொடரில் பங்கேற்கிறது. நேற்று இடம்பெற்ற இரண்டாவது போட்டியில் டொஸ் வென்ற இந்திய கப்டன் சுப்மன் கில் பட்டிங் தேர்வு செய்தார். கலீல் அஹமது நீக்கப்பட்டு தமிழகத்தின் சாய் சுதர்சன் வாய்ப்பு பெற்றார்.

பென்னட் பந்தில் சிக்சர் அடித்து இந்தியாவுக்கு அதிரடி தொடக்கம் தந்தார் அபிஷேக் சர்மா. மறுபக்கம் கில்ன் (2) ஏமாற்றினார். பின் அபிஷேக், ருதுராஜ் சேர்ந்து அசத்தினர். மையர்ஸின் 11 ஆவது ஓவரில் அபிஷேக் 2 சிக்சர், 3 பவுண்டரி அடிக்க, மொத்தம் 28 ரன் எடுக்கப்பட்டன. 33 பந்தில் அரைச்சதம் எட்டினார் அபிஷேக். மசகட்சா ஓவரில் ஹாட் ரிக் சிக்சர் விளாசிய அபிஷேக், 46 பந்தில் சதம் எட்டினார். 100 ரன் னுக்கு (7 பவுண்டரி, 8 சிக்சர்) அவுட்டானார்.

முதல் 10 ஓவரில் 74/1 ரன் எடுத்த இந்தியா, அடுத்த 10 ஓவரில் 160 ரன் குவித்தது. இந்திய அணி 20 ஓவரில் 2 விக்கெட்டுக்கு 234 ரன் எடுத்தது. ருதுராஜ் (77, 11 பவுண்டரி, 1 சிக்சர்), ரிங்கு சிங் (48, 2 பவுண்டரி, 5 சிக்சர்) அவுட்டாகாமல் இருந்தனர்.

கடின இலக்கை விரட்டிய ஜிம்பாப்வே அணி, முகேஷ் குமார், அவேஷ் கான் "வேகத்தில்" சிதறியது. பிஷ்னோய் சுழல் ஜாலம் காட்ட விக்கெட்டுகள் விரைவாக சரிந்தன. வெஸ்லிமாதவெரே அதிகபட்சமாக 43 ரன் எடுத்தார். பென்னட் (26), லூக் ஜோங்வா (33), கேம்பல் (10) ஆறுதல் அளித்தனர். மற்றவர்கள் ஏமாற்ற, ஜிம்பாப்வே அணி 18.4 ஓவரில் 134 ரன்னுக்கு சுருண்டு தோல்வி அடைந்தது.

இதன் மூலம் முதல் போட்டியில் சந்தித்த தோல்விக்கு இந்திய அணி சுடச்சுட பதிலடி கொடுத்தது. தொடர் 1-1 என சமநிலையை எட்டியது. ஆட்டநாயகன் விருதை அபிஷேக் சர்மா தட்டிச் சென்றார்.


23 வயதேயான பஞ்சாப்பை சேர்ந்தவர் அபிஷேக் சர்மா சமீபத்தில் முடிந்த 17ஆவது ஐ.பி.எல்., தொடரில் ஐதராபாத் அணிக்காக அபாரமாக ஆடியிருந்தார். சர்வதேச ரி-20 அரங்கில் இருந்து ரோகித் சர்மா ஓய்வு பெற்றதால தொடக்க வீரருக்கான இடத்தை அபிஷேக் தட்டிச் செல்லலாம்என கருத்துக் கணிப்பு நிலவி வருகின்றது. (க-6)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3163

### கீர்த்தனா




### சோபனா




### தனுஷ்கா




### மதுமிதா




### கோபிநாத்




### கீர்த்திகன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

noolaham.org | aavanaham.org

உ
ஓம் நமசிவாய

# மாணிக்கவாசகர் திருவாசக விருந்து அலைகின்ற மனத்திற்கு ஒய்வளிக்கும் கடவுள் அருள்வாரி வழங்கும் கற்பகம்

**காரைநகர் மாணிக்கவாசகர் மடாலயத்தில் குருபூசையும், திருவாசக முற்றோதலும்-காலை 8.00 யாழ்ப்பாணம் வண்ணை வாலாம்பிகை சமேத வைத்தீஸ்வரன்- ஆலயத்தில் சமய குரவர்கள் திருவீதி திருமுறையுடன் வர வணங்கி வரம் பல பெறுவோம்.**



**ஆடுகின்றிலை கூத்துடையான் கழற்**
**கன்பிலை என்புருகிப்**
**பாடுகின்றிலை பதைப்பதும்**
**செய்கிலை பணிகிலை பாதமலர்**
**சூடுகின்றிலை சூட்டுகின்றதும் இலை**
**துணை இலி பிணி நெஞ்சே**
**தேடுகின்றிலை தெருவுதோறு**
**அலறிலை செய்வ தொன்றறியேனே.**
***திருவாசகத்திலிருந்து-35***

அன்பு மிகுதியால் ஆடுகின்றாயும் இல்லை! எலும்பு உருகி திருவாசகம் பாடுகின்றாயும் இல்லை. துடித் தலையும் இல்லை. வணங்குகின்றாயும் இல்லை. திருவடிக்கு அன்பு இல்லை, நின் தலைமேல் சூடு கின்றாயுமில்லை, மலர்களைச் சாத்துவதும் இல்லை, அவனைத்தேடுகின்றாயும் இல்லை, தெருக்கள் தோறும் அலறுகின்றாயும் இல்லை. அதனால் இறை துணையில்லை. இதற்குச் செய்யத்தக்க வழியாது? தினம் திருவாசகம் ஓதுவோம்.

**முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்**
**பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம்**
**சித்தமலம் அறிவித்துச் சிவமாக்கி எனையாண்ட**
**அத்த(ன்) எனக்(கு) அருளியவா(று)**
**ஆர்பெறுவார் அச்சோவே.**

**அச்சோ என்பது வியப்புச் சொல்.** ஆன்மாக்கள் யாவர்க்கும் அரிதாகிய திருவடிப்பேறு தமக்கு வாய்த்தனை, எனும் பேறு, அடியேனின் கூடா நட்புறவுகளைத் தடுத்து அன்பு வழியில் செலுத்தி; அடர்த்து வரும் வினைத்துன்பங்களில் இருந்து விடுபடுமாறு வினைப்பதிவேட்டில் உள்ள என்தலை எழுத்தை அழித்து சிவமாந்தன்மையை உணர்த்தி ஆட்கொண்ட இறைவனின் அருளிப்பாட்டை, **நாமும் இன்றைய தினம் திருவாசக முற்றோதல் ஓதுவோம்.**

**ஒவ்வொரு நாளும் பத்து பத்து திருவாசகம் ஓதுவோம்; "சுண்ண வெண்ணீ(று) அணிவித் துத் தூய் நெறியே சேரும் வண்ணம்"** நாமும் தன் திருவெண்ணீற்றினை அணிவித்தத் தூய பேரின்ப நெறியை அடையும் வண்ணம் அருளி யுள்ளது தான் திருவாசகம். **நமக்குத் தந்த இறைய ருளால் தோன்றிய ஒரு சிவ கணத் தலைவரே திருவாதவூரர் என்னும் மாணிக்கவாசகர்.**

**வானளாவிய புகழுடைய மாணிக்கவாசகப் பெருமானே!**

**நின் திருவாசகத்தை ஒன்றி யான் பாடுங்கால் ,** நற் கருப்பஞ்சாற்றில் தேனும் பாலும் நன்றாக பழுத்த தூய கனியின் சாறும் கலந்தது போல என் **உடலிலும் உயிரிலும் கலந்து.**

**தாயுமானவர், ராமலிங்கம்** போன்ற இறையரு ளார்க்கும் எங்களுக்கும் **மாணிக்கவாசகர் திருவாசகம் வழிகாட்டியாக அமைந்தது.**

திருவாசகத்தையும் திருக்கோவையாரையும் மாணி க்க வாசகர் இருந்து பாட, அந்தண உருவில் வந்த தில்லை நடராஜப் பெருமானே.

நின்ற நிலையில் ஏட்டில் எழுதி நூல் நிறைவாக்கி திருச்சிற்றம்பலமுடையான் கையொப்பம் சாத்தித்திட்டுத் திரு அம்பலத்தின் முன் உள்ள பஞ்சாகரப்படியில் வைத்து மறைந்தார்.

**காரைநகர் ஈழத்துச் சிதம்பரம்**

ஏட்டில் எழுதிய திருவாசகம் பாதுகாத்தது போல், இறைவன் எழுதிய ஏடும் இன்றும் பாதுகாப்பாக உள்ள ஓர் அற்புதக் கூத்தன் சங்கரா கூத்தன், ஆனந்தக் கூத்தன் மிகு அருளாகும்.

நெற்றிக் கண் சிவன் திருவருள் வெள்ளத்தால் ஆழ்ந்த திருவாசகம் ஏட்டில் எழுதிய ஈழத்துச் சிதம்பரம் அம்பலவி முருகர் திருக்கோவில்கள் கட்டுவித்த சிறந்த திருத்திண்ணபுரப் பதி அடியார்கள்.பரம்பரையாகத் தொழுது ஈடேறுமாறு செய்ய வேண்டிய திருப்பணிகள் பலவற்றையும் செய்தார்கள். அவர் தமக்குப்பின் வந்த பாதுகாவலர்களுக்கு உரைக்கல்லாக விளங்கினார்.

**அம்பலவி முருகனார் தவத்தால் தோன்றிய பேரு ருவானவர்.**

தொடர்ந்து சண்முகம் மகன் சின்னத்தம்பியார், மாசிலாமணியர், இவர்கள் எல்லோரும் வெண்மை யுடைய நான்கு முழுவேட்டியுடுத்தும் உள்ளம் தூயவர்களாக அம்பலவி முருகர் மேற்கொண்ட திருப் பணிகளைச் செய்தல் ஆகிய கொள்கையை தமக்கும் கொள்கையாக உடையவர்கள்.

ஓதுவோர்களை சிவ கதியைச் சேர்க்கும் கடவுள் தன்மையுள்ள திருக்கோவையும் **உலகெங்கும் புகழ் பெற்ற** திருவாசகத்தையும் அருளிச் செய்த மாணிக்க வாசகப் பெருமானது தூய திருநாமம் காரைநகர் எங்கும் ஏன் உலகெங்கும் சிவமணத்தை வீசச் செய்ய அழகிய **மாணிக்கவாசகர் மடாலயத்தையும்** மாசிலா மணியாரும் துரையப்பரும் பெரியவராகிய ஆண்டி முனிவரது குற்றமற்ற சிறந்த அழகிய பெயரைத் தமக்கும் பெயராக்கிய ஆண்டியையாவும் முருகேசரும் பாதுகாவலர்களாகப் பொருந்தியிருந்து அம்பலவி முருகரது தூய மனம் போல நாள் தோறும் அன்பு நிறைந்த மனத்தோடு திருக்கோயில் பாதுகாப்பைச் செய்து வந்தனர்.

ஆலயம் புனருத்தாரணத் திருப்பணி சோர்வின்றி இடையறாது செய்வாராகில் **"தெய்வத்தின் உண்ணி ன்றுணர்த்த"** சிவ தொண்டாற்றும் அருட் செல்வத்தைப் பெறுவார்கள்.கோயில்களைப் புதுப்பிப்பவர்களையும், கோயில் விதிப்படி பூசை விழாக்களையும் செய்த வர்களையும் செய்வித்தவர்களும் தாம் விரும்பிய பேறுகளைப் பெற்று **இன்புறுவர் என்று நூல்கள் கூறும்.**

**திருத்திண்ண புரத்து தில்லைக் கூத்தன் திரு வருளுடன் கும்பாபிஷேகம் பார்த்து சிதம்பரத்தான் பேரருள் பெற்று உய்வோம்.**

மானிடம் செழிக்க மாமழை பொழிந்த
மாணிக்கவாசகர் திருவடிகளை வணங்குவோம்.
சிவகாமி சமேத
திருத்திண்ணை புரத்தில்லைக் கூத்தன் சிதம்பரம்

**சிவகாமி உடனுரைத் தில்லை நடராஜன் திருவடிகளை வணங்கி திருவாசம் , திருமுறை திருப் புகழ் ஓதுவோம் பெருமான் திருவடிகளை போற்றித் துதித்து அவன் அருளாலே அவன் தான் வணங்கி பேரருள் பெற்று நன்னெறியில் நல்லவர்களுடன் இணைந்து நற்கதியடைவோம்.**

சிவலோகத்தில் இருந்து சிவபெருமானின் திருவுளக் கருத்தின் படி, இன் நிலவுக்கு வந்த திருவருளையே துணையாகக் கொண்டு சிவப் பணியால் மக்களை உய்யும் நெறி காட்டி ஈடேற்றிய பெருமக்கள் ஆவர்.

தீந்தமிழ்த் திருவாகம் பாடியருளிய மாணிக்கவாசகர் தனிச்சிறப்பு மிக்க நிறைமொழி மாந்தர் ஆவார்.

**மாணிக்க வாசகர் ' ஆணையிற் கிளந்த மறை மொழிகளே மந்திரம்" எனவும் இம் மந்திர மொழி பனுவல்களே திருவாசகம் எனவும் போற்றி தினம் ஓதப் பெறுகின்றன.**

சித்தாந்த விழுப்பொருள்கள் செறிந்து விழங்கவும் பக்திச்சுவையும் நிறைந்த திருவாசகத் தேன் நனி சொட்டச் சொட்டவும் நாளும் ஓதி உய்வு பெறவும் ஒவ்வொருவரது கடமை ஆகும். **இல்லங்களிலும் உள் ளங்களினும் ஒளிக்குமாறு செய்வது சிறந்த ஓர் சிவப் பணியாகும்.**



க.கு.க சிவபாலன்
மாணிக்கவாசகர்
மடாலய போசகர் (சி-757)

# இராசிபலன்

09.07.2024
ஆனி 25, செவ்வாய்க்கிழமை
திருதியை காலை 6.47 மணி வரை

ஆயிலியம் மு.ப 9.02 மணி வரை
சுபநேரம் 10.28-11.58 மணிவரை
இராகுகாலம் 2.58-4.28 மணிவரை

சந்திராஷ்டமம் - மூலம்
சதுர்த்தி விரதம்,
மாணிக்கவாசகர் குருபூசை தினம்.

**வள்ளுவன்**




புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர் கள், வழிபாடு திருப்தி தரும், சந்திப்புகளால் சந்தோசம் கிடைக்கும் நாள், அடிப்படைத்தேவைகள் பூர்த்தி யாகும்.




குடும்பத்தினர் பெரு மைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடை பெறும், புதிய பொருள் சேர்க்கையுண்டு, முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள்.




எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவ முன் வரலாம், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், பணப்புளக்கம் அதிகரிக்கும் நாள்.




சிலர் பாராட்டுவது போல உங்களை விமர் சிக்கலாம், வேலைகள் உடனுக்குடன் முடி யாமல் தாமதமாகலாம், வார்த் தைகளில் நிதானம் தேவை.




தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், விருந்தினர் சந்திப்புக் கள் இடம்பெறலாம், பயணங்கள் கைகூடும் நாள்.




நண்பர்கள் ஒளி மறைவு இன்றிப் பழகுவார்கள், திட்டமிட்ட காரி யங்களில் திசை திருப் பங்கள் ஏற்படலாம், அனுபவத்தின் வாயிலாக பல தகவல்களை அறிந்து கொள்வீர்கள்.




செய் தொழில் மேன் மையுண்டு, மதிப்பும் மரியாதையும் உயரும் வாய்ப்புண்டு, பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், தொட்ட காரியங்களில் வெற்றி பெறுவீர்கள்.




சுப நிகழ்ச்சியில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, மதிநுட்பத்தால் மகத்தான காரியம் ஒன்று செய்து முடிப்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




இழுபறியாக இருந்த காரியங்களில் முன் னேற்றம் காணும் நாள், உள்ளொன்று வைத்து புறமொன்று செயற்ப டுபவர்களை இனம் கண்டு கொள் வீர்கள், போசன சுகமுண்டு.




அலைச்சல் காணப்ப ட்டாலும் ஆதாயம் பெறுவீர்கள், வழி பாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், சுப விர யங்கள் மேலோங்கும் நாள்.




அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் செய்து முடிக்க முற்ப டுவீர்கள், உதாசீனப்படுத்திய வர்களின் உதவிகள் கிடைக்கும். பயணங்களால் பலனுண்டு.




கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், உறவு பகை பாராமல் ஒற்றுமையாக இருக்கும் நாள், உடல் நலனில் இருந்த பாதிப்புக்கள் விலகும், போசன சுகமுண்டு.

**தீய நண்பர்களைவிட தனித்திருப்பதே மேல்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்களாதேஷ் உருவான கதையும் அந் நாட்டின் தேர்தல்களும் - ஒரு பார்வை




**கலாநிதி க.தவலிங்கம்**

ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.


13

காலை 9 மணியளவில் அவர்கள் ஃபதேபூர் உயர்நிலைப் பள்ளி மற்றும் ஃபதேபூர் அரசு தொடக்கப் பள்ளியை கட்டைகள், இரும்பு கம்பிகள் மற்றும் அரிவாள்களால் தாக்கினர். பின்னர் ஷாஹினுர் ரஹ்மான் மற்றும் அவரது மூன்று சகோதரர்களின் வீடுகளை தாக்கி தீ வைத்து எரித்தனர். பன்ஷ்டாலா சந்தையில், ஃபதேபூர் உயர்நிலைப் பள்ளியின் நிர்வாகக் குழு உறுப்பினர் அப்துல் ஹக்கீம் சர்தாரின் கடைக்கு தீ வைத்தனர்.

பின்னர் சூரியன் மறைந்ததும் மிதா ராணி ஹஸ்ரா உட்பட 7 இந்து குடும்பங்களின் வீட்டை முஸ்லிம்கள் எரித்தனர். அந்த வீடுகளில் இருந்த மதிப்புமிக்க பொருட்களையும் கொள்ளையடித்தனர்.

ஞாயிற்றுக்கிழமை பிற்பகலில், சக்தஹா கிராமத்தைச் சேர்ந்த லலிதா சர்தார் என்ற இந்து இல்லத்தரசி, முகமதுவைப் பற்றி மற்றொரு அவதூறான கருத்தைச் சொன்னதாக வதந்தி பரவியது. சர்தார் இல்லத்தில் மக்கள் திரளத் தொடங்கினர். மாலையில், உள்ளூர் யூனியன் பரிஷத் உறுப்பினர்களுடன் நாஜிம்கஞ்ச் பஜார் கமிட்டியின் தலைவர் ஃபிரோஸ் கபீர் காஜல் அவர்களின் வீட்டிற்கு வந்தார்.

லலிதாவின் அவதூறான கருத்துக்களுக்காக பகிரங்கமாக மன்னிப்பு கேட்கும்படி அவர்கள் வற்புறுத்தத் தொடங்கினர். இந்த சந்திப்பின் போது அருகில் உள்ள கிராமங்களைச் சேர்ந்த சுமார் இருநூறு இளைஞர்கள் அவர்களது வீட்டின் அருகே ஒன்று திரண்டு அந்த குடும்பத்தை அடித்து உதைத்து இந்தியாவுக்கு அனுப்பப்போவதாக மிரட்டினர்.

இரவு 7 மணியளவில் கலிகஞ்ச் உபாசிலாவின் பல்வேறு கிராமங்களில் இருந்து ஆயிரக்கணக்கான இளைஞர்கள் சம்பவ இடத்திற்கு வரவழைக்கப்பட்டனர். சிறுபான்மை இந்துக்களின் வீடுகளைச் சுற்றிலும் வெளியாட்கள் கூடி, அவர்களது வீடுகளில் கற்கள் மற்றும் செங்கல் மட்டைகளை வீசத் தொடங்கினர். இந்து ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் உயிருக்கு பயந்து பாதுகாப்பை நோக்கி ஓடத் தொடங்கினர்.

தாக்குதல் நடத்தியவர்கள் அவர்களது வீடுகளை உடைத்து நகைகள், ஆடைகள், காணி பத்திரங்கள் மற்றும் ஏனைய பெறுமதியான ஆவணங்கள் உட்பட பெறுமதியான பொருட்களை கொள்ளையடித்து சென்றுள்ளனர். லலிதா சர்தாரிடம் இருந்த நகைப்பெட்டியையும் பறித்துச் சென்றனர். கொள்ளையடிக்கப்பட்ட பொருட்களை பாதுகாப்பான இடங்களில் பத்திரப்படுத்திய பின்னர், மர்ம நபர்கள் வீடுகளுக்கு பெற்றோல் ஊற்றி தீ வைத்து எரித்தனர்.

10 இந்துக் குடும்பங்களின் வீடுகள் சூறையாடப்பட்டு தீவைக்கப்பட்டன. பொலிஸார் முன்னிலையில் கொள்ளை மற்றும் தீ வைப்பு நடந்தது. வீடுகள் முழுவதுமாக எரியும் வரை தீயணைப்பு படையினரை அப்பகுதிக்குள் நுழைய விடாமல் தடுத்தனர். மாவட்ட மாஜிஸ்திரேட், மாவட்ட காவல் கண்காணிப்பாளர், கூடுதல் டி.ஐ.ஜி. (குல்னா ரேஞ்ச்) மற்றும் RAB அதிகாரிகள் இரவு வந்து நிலைமையை கட்டுக்குள் கொண்டு வர முயன்றனர்.

ஆரம்பத்திலிருந்தே, ஹோம் சத்கிரா சமூகம் என்ற உள்ளூர் விழிப்புணர்வுக் குழுவால் நிர்வகிக்கப்படும் ஒரு சமூக ஊடகம் ஃபதேபூர் சோகத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒரு நிலைப்பாட்டை எடுத்தது. எஸ்.எம் சைஃபுர் ரஹ்மான் தலைமையில், நாடு மற்றும் வெளிநாடுகளில் உள்ள நனவான வட்டங்களின் கவனத்தை ஈர்ப்பதன் மூலம் அடிப்படைவாத குண்டர்களுக்கு எதிராக வலுவான நிலைப்பாட்டை எடுத்தனர்.

சிறுபான்மை இந்து சமூகத்தின் உயிர்களைக் காக்க இணையம் மற்றும் ஆஃப்லைனில் வெகுஜன இயக்கங்களை உருவாக்கி தங்கள் ஆதரவுடன் முன் வந்தனர். இதைத் தொடர்ந்து, அடிப்படைவாதக் குழு SM சைபுர் ரஹ்மான் மற்றும் அவரது தோழர்களை அச்சுறுத்தத் தொடங்கியது. அவர்களின் உயிரைக் கொன்றுவிடுவதாகவும், வீடுகளை எரித்துவிடுவதாகவும் மிரட்டினர்.

தாக்குதல்கள் நடந்து ஒரு வாரத்திற்குப் பிறகும், பாதிக்கப்பட்ட பெரும்பாலான இந்துக்கள் இன்னும் அச்சத்தில் இருந்தனர். பல குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் வீடுகளுக்குத் திரும்பவில்லை.

இந்த சம்பவம் குறித்து பங்களாதேஷ் முக்கிய ஊடகங்கள் முற்றிலும் மௌனம் சாதித்தன. அப்போது டாக்கா பல்கலைக்கழகத்தின் ஜெகநாத் மண்டபத்தில் இந்து மாணவர்கள் அடக்குமுறைக்கு எதிராக போராட்டம் நடத்தினர். டாக்கா பல்கலைக்கழக ஜெகநாத் மண்டபத்தின் மாணவர்கள் 5 ஏப்ரல் 2012 வியாழன் அன்று காலை ஷாபாக் மத்ஸ்ய பாபன் சந்தியில் தடுப்புகளை வைத்து ஆர்ப்பாட்டங்களை நடத்தினர். பங்களாதேஷ் ஊடகங்கள் இந்த நிகழ்வை முன்னிலைப் படுத்தின.

ஏறக்குறைய 500 மாணவர்கள் காலையில் தங்களுடைய தங்குமிடத்திலிருந்து ஊர்வலமாக அழைத்து வந்து, பின்னர் 10:30 மணியளவில் ஷாபாக்கில் நிலைநிறுத்தப்பட்டனர். சம்பவத்திற்கு காரணமானவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

## 2012 சிரிர்பந்தர் வன்முறை

2012 சிரிர்பந்தர் வன்முறை என்பது பங்களாதேஷின் ரங்பூர் பிரிவில் 4 ஒகஸ்ட் 2012 அன்று தினாஜ்பூர் மாவட்டத்தின் சிரிர்பந்தர் உபாசிலாவில் இஸ்லாமிய தீவிரவாதிகளால் சிறுபான்மை இந்து சமூகத்தின் மீதான தாக்குதலைக் குறிக்கிறது.

சிரிர்பந்தர் உபாசிலாவின் அமர்பூர் யூனியன் கவுன்சிலின் கீழ் உள்ள ராஜாபூர் கிராமத்தின் பாலை பஜார் பகுதியில் ஒரு தற்காலிக மசூதி இருந்தது. நிலத்தின் உரிமையாளர் சிட்டகாங் பெருநகரக் கல்லூரியின் பேராசிரியர் ஹமிதா காதுன் ஆவார். அவர் மசூதியை நிரந்தரமாக்க விரும்பினார். இச்சம்பவத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்னர் மசூதிக்கான அடிக்கல் நாட்டப்பட்டது. ஆனால் மசூதியில் இருந்து சுமார் 200 அடி தூரத்தில் ஒரு பழைய காளி கோவில் இருந்தது.

ராஜபூர் கிராமம் முழுக்க முழுக்க இந்துக்கள் ஆதிக்கம் செலுத்தும் கிராமம் ஆகும். அங்கு உள்ளூரில் முஸ்லீம் இல்லை. எனவே 500 யார் தொலைவில் மசூதியைக் கட்டுமாறு இந்துக்கள் பேராசிரியர் ஹமிதா காதுனிடம் கோரிக்கை விடுத்தனர். ஆனால் அவர் மறுத்து, சிரிர்பந்தர் உபஜிலா பரிஷத் தலைவரும் பங்களாதேஷ் ஜமாத்-இ-இஸ்லாமி தலைவருமான அஃப்தாப் அலி மொல்லாவின் உதவியுடன் உள்ளூர் முஸ்லிம்களை கிளர்ச்சியூட்டும் வகையிலும் எரிச்சலூட்டும் வகையிலும் உரையை நிகழ்த்தினார். இது வன்முறையை உண்டாக்கியது.

இந்த சம்பவம் அப்பகுதியில் உள்ள இந்து சமூகத்தினரிடையே பீதியை ஏற்படுத்தியது. அவாமி லீக் இந்த சம்பவத்தை அடக்கியது. ஷஹ்ரியார் கபீர் மற்றும் சையத் ஷம்சுல் ஹக் போன்ற 50இற்கும் மேற்பட்ட வங்காளதேச அறிவுஜீவிகள் வன்முறைக்கு கண்டனம் தெரிவித்தனர்.

## 2012 ராமு வன்முறை

2012 ராமு வன்முறை என்பது ராமு உபாசிலாவில் உள்ள புத்த மடாலயங்கள், விகாரைகள் மற்றும் பௌத்த மக்களின் வீடுகள் மீதான தொடர்ச்சியான தாக்குதல்களைக் குறிக்கிறது.

ஒரு புனைப்பெயரைப் பயன்படுத்தும் நபர் ஒருவர் குரானை இழிவுபடுத்துவதை சித்தரிக்கும் படத்தை புத்த மதத்தின் முகநூல் பக்கத்தில் வெளியிட்டார். சில உள்ளூர்வாசிகள் இந்த சம்பவத்தால் கோபமடைந்து செப்டம்பர் 29 அன்று மதியம் மற்றும் மாலையில் ராமுவில் ஊர்வலங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்களை நடத்தினர்.

இதன் எதிரொலியாக வங்கதேசத்தில் உள்ள காக்ஸ் பஜார் மாவட்டத்தில் உள்ளூர் கும்பல்களால் கடந்த 29 செப்டம்பர் 2012 நள்ளிரவில் 12 புத்த கோவில்கள் மற்றும் மடங்கள் மற்றும் 50 வீடுகள் அழிக்கப்பட்டது. இந்த முகநூல் பதிவை பௌத்தர் செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இவ் வன்முறை பின்னர் காக்ஸ் பஜார் மாவட்டத்தில் உள்ள உக்கியா உபாசிலா மற்றும் சிட்டகாங் மாவட்டத்தில் உள்ள பாட்டியா உபாசிலா ஆகிய இடங்களுக்கு பரவியது. அங்கு புத்த மடாலயங்கள் மற்றும் இந்து கோவில்கள் தாக்குதலுக்கு இலக்காகின.

பௌத்தர்களுக்கு எதிரான வன்முறையில் சுமார் 25,000 பேர் பங்கெடுத்து இருந்தனர் மற்றும் தாக்குதல்கள் தொடர்பாக 300 பேர் கைது செய்யப்பட்டனர்.

செப்டம்பர் 30 அன்று, சிட்டகாங் பிரிவின் மேலதிக பிரிவின் ஆணையரான நூருல் இஸ்லாம் தலைமையில் அதிகாரப்பூர்வ விசாரணைக் குழு அமைக்கப்பட்டது. இக்குழு ஒக்டோபர் 1 ஆம் திகதி அமர்ந்து பிரச்சனைக்குரிய பகுதிகளின் உபாசிலா அதிகாரிகளின் அறிக்கைகள் மற்றும் தினசரி செய்தித்தாள் அறிக்கைகளை மதிப்பாய்வு செய்தது.

2012 ஆம் ஆண்டு காக்ஸ் பஜாரில் உள்ள ராமு என்ற இடத்தில் உள்ள புத்த கோவிலை தாக்கி சேதப்படுத்தியது தொடர்பாக நான்கு வாரங்களில் கீழ் நீதிமன்றத்தில் சரணடையுமாறு பந்தர்பனின் நைகாஞ்சரி அப்ஜிலாவின் துணைத் தலைவரான டோஃபைல் அகமதுவை உச்ச நீதிமன்றம் 12 மே 2014 அன்று உத்தரவிட்டது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதியின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள்

(கொழும்பு)

அரசியலமைப்பின்பிரகாரம் ஜனாதிபதியின் பதவிக்காலம் ஐந்து வருடங்கள் என்பது தெளிவாக உள்ளதாக சட்டமா அதிபர் உச்ச நீதிமன்றத்திற்கு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் பதவிக்காலம் தொடர்பான மனு நேற்று நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட போதே சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் கனிஷ்க டி சில்வா இதனைத் தெரிவித்தார்.

மேலும் சம்பந்தப்பட்ட மனுவை தள்ளுபடி செய்யக் கோரி பூர்வாங்க ஆட்சேபனைகள் எழுப்பப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இவேளை இந்த மனுவை பரிசீலிப்பதற்காக பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, விஜித் மலல்கொட, முர்து பெர்னாண்டோ, பிரீத்தி பத்மன் சூரசேன மற்றும் எஸ். துரைராஜா ஆகிய ஐந்து பேர் கொண்ட உயர் நீதிமன்ற நீதியரசர்கள் அமர்வு அண்மையில் நடைபெற்று இருந்தது.

தொழிலதிபர், சி.டி.லெனவவினால் கடந்த புதன்கிழமை இந்த மனுத்தாக்கல் செய்யப்பட்டது. குறித்த மனுவில் அரசியலமைப்பின் பிரகாரம் தற்போதைய ஜனாதிபதியின் பதவிக்காலம் தொடர்பில் உயர் நீதிமன்றம் தெளிவூட்டும் வரை, அடுத்த ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு இடைகாலத்தடை உத்தரவினைப் பிறப்பிக்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (க-6)

# மனவளக்கலை பயிற்சிகள்

(யாழ்ப்பாணம்)

மனவளக்கலைமன்ற அறக்கட்டளையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவிலில் “வேதாத்திரிய ஆன்மிக மேம்பாடு” பயிற்சிகள் தினமும் மாலை 3 மணி தொடக்கம் 4 மணிவரை நடைபெறவுள்ளது.

பயிற்சிகளை தமிழ்நாட்டில் இருந்து வருகை தந்துள்ள மனவளக்கலை பேராசிரியர் வி.கே.உஷா வழங்குவார்.

மேலதிக தகவல்களுக்கு 021 222 2772 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என ஏற்பாட்டுக் குழு அறிவித்துள்ளது. (க-6)

# மாடு கடத்திய இருவர் மக்களால் நையப்புடைப்பு

(குருமன்காடு)

வவுனியா, தாண்டிக்குளம் பகுதியில் மாட்டினை கடத்திச் சென்ற இருவரை மடக்கிப் பிடித்த அப் பகுதி இளைஞர்கள் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது. இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது.

வவுனியா, பத்தினியார் மகிழங்குளம் பகுதியில் காணி ஒன்றில் கட்டி நின்ற மாட்டினை கடத்திச் சென்ற இருவரை தாண்டிக்குளம் பகுதியில் வழி மறித்த இளைஞர்கள் அவர்களை கட்டி வைத்து நையப்புடைத்ததுடன் வவுனியா பொலிஸாருக்கும் தகவல் வழங்கியிருந்தனர்.


வவுனியாவில் கடந்த சில மாதங்களாக மாடுகள் திருடப்படும் சம்பவங்கள் அதிகரித்துச் செல்கின்றமை தொடர்பாக பொதுமக்களால் தொடர்ச்சியான முறைப்பாடுகள் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-6-250)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

கலாபூஷணம்

**பரீட் இக்பால்**

ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் நிறைவேற்று குழு உறுப்பினராக வாக்கெடுப்பின் மூலம் தெரிவு செய்யப்பட்டதானது யாழ் முஸ்லிம்களை கௌரவித்த விடயமாகும். மேலும் பெருமைக்குரிய விடயமுமாகும். யாழ் பரீட் இக்பாலுக்கு வாக்களித்த சகோதர சகோதரிகளுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். யாழ் பரீட் இக்பாலை பாராட்டி வாழ்த்துகின்றோம்



(A-758)

வாழ்த்துவோர்
யாழ் முஸ்லிம் சமூக ஊடகம்

# தொழில்நுட்ப கோளாறு தரையிறங்கிய விமானம்

(கொழும்பு)

தென்கொரியாவின் இன்சியான் சர்வதேச விமான நிலையத்தை நோக்கிப் பயணித்த ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமானமொன்று தொழில்நுட்பக் கோளாறு காரணமாக மீண்டும் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறங்கியுள்ளதாக விமான நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த விமானம் நேற்று முன்தினம் மாலை 6.20 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து தென் கொரியாவின் இன்சியான் விமான நிலையத்தை நோக்கி பயணித்துள்ள நிலையில் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக சுமார் இரண்டு மணிநேர பயணத்தின் பின்னர் மீண்டும் இரவு 8.10 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறங்கியுள்ளது.

இந்த விமானத்தில் 144 பயணிகளும் 15 பணியாளர்களும் இருந்துள்ளனர். இந்த பயணிகளை வேறொரு விமானத்தின் மூலம் தென்கொரியாவுக்கு அனுப்ப திட்டமிட்டுள்ளதாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (க-6)

# நிராகரிக்கப்பட்ட தேர்தல் மனு

(கொழும்பு)

ஜனாதிபதியின் பதவிக் காலம் தொடர்பில் விளக்கமளிக்கும் வரை ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதைத் தடுக்கும் உத்தரவைப் பிறப்பிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை உயர் நீதிமன்றம் நிராகரித்தது.

அத்துடன் நீதிமன்றக் கட்டணமாக ஒரு இலட்சம் ரூபாய் செலுத்துமாறும் மனுதாரருக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது. நீதிமன்ற கட்டணத்தை ஒரு மாதத்திற்குள் செலுத்த வேண்டும் எனவும் மனுதாரருக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையிலான ஐவரடங்கிய உயர் நீதிமன்ற ஆயம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

இந்த மனுவை தொழிலதிபர் சி.டி.லெனவ சமர்ப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-6)


**லங்கா மஹால் (PVT) LTD**

DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில்
இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை.

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
**0091956156719**

WESTERN UNION WU MoneyGram. Ria MONEY TRANSFER
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
077 [illegible]

(45)



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 13<br>உயரம் : 6<br>தகைமை/தொழில்: A/L, பொலிஸ் உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: நற்குணமுள்ள பெண்<br>தொ.இ: B/14640 | பிறப்பு: 1998 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>4இல் செவ்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: தகுந்த வரன்<br>தொ.இ: G/14665 |
| பிறப்பு:1989 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 10 3/4<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில் PHD (Final Year), உதவிப்பணிப்பாளர்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி (Science,Commerce)<br>தொ.இ : B/14641 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 33<br>7 இல் செவ்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: Nursing Diploma, Nursing Officer<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: G/14667 |
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 50 2 இல் செவ்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:Bsc, Software Engineer<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி,அரச உத்தியோகம் Teacher<br>தொ.இ:B/14642 | பிறப்பு: 1997 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 73<br>2 இல் செவ்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்:Bsc in Computer Science<br>எதிர்பார்ப்பு:அரச/தனியார் உத்தியோகம்<br>தொ.இ: G/14669 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

### மருத்துவச் செலவுக்கு பணமில்லை

# பச்சிளம் குழந்தையை மண்ணில் புதைத்த தந்தை

(இஸ்லாமாபாத்)

மருத்துவம் செய்ய வசதி இல்லாததால் பிறந்து 15 நாட்களே ஆன தனது பெண் குழந்தையை தந்தை ஒருவர் உயிருடன் புதைத்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில் வாழ்ந்து வரும் நபர் ஒருவரின் மனைவி கடந்த 15 நாட்களிற்கு முன் பெண் குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்துள்ளார்.

இந்நிலையில் குழந்தையின் ஆரோக்கியம் குன்றியதால் சிகிச்சை அளிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. ஆனால் மிகுந்த ஏழ்மையில் வாழ்ந்து வந்த குறித்த தந்தையிடம் மருத்துவச் செலவுக்கு பணம் இல்லாததால், பச்சிளம் குழந்தையை உயிருடன் மண்ணில் குழிதோண்டி புதைத்துள்ளார்.

இதனால் குழந்தை மூச்சுத் திணறி உயிரிழந்தது.

இந்த சம்பவம் குறித்து தகவல் அறிந்த பொலிஸார் இக்கொடும் செயலைப் புரிந்த தந்தையை கைது செய்துள்ளனர்.

மருத்துவ செலவுக்கு பணம் இல்லாததால் பெற்ற குழந்தையை உயிருடன் புதைத்தாக அவர் வாக்கு மூலம் அளித்துள்ளார். (க-6)

# இளவயதில் பாராளுமன்றம் சென்று இளைஞன் வரலாற்றுச் சாதனை



(லண்டன்)

அண்மையில் நடந்து முடிந்த பிரிட்டன் பொதுத் தேர்தலில் 22 வயது இளைஞர் ஒருவர் பாராளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

வடமேற்கு கேம்பிரிட் ஜ்ஷயர் தொகுதியில் 39 வாக்குகள் அதிகம் பெற்று இவர் வெற்றி பெற்றுள்ளார். கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் பட்டதாரியான சாம், சுமார் 22 ஆண்டுகள் எம்.பி.யாக பணியாற்றிய ஷைலேஷ் வராவை தோற்கடித்தார்.

தனது வெற்றியை "அரசியல் பூகம்பம்" என்று வர்ணித்த சாம், இன்னும் அதிகமான இளைஞர்கள் அரசியலுக்கு வருவார்கள் என்று நம்புவதாகக் தெரிவித்தார்.

தொழிலாளர் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி தேர்தலில் வெற்றி பெற்ற சாம்காரின் "பாராளுமன்றத்தின் குழந்தை" என்று அழைக்கப்படுவார் என விமர்சகர்கள் கூறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-6)


# மண்ணுக்குள் தங்கம் தோண்டியவர்கள் மண்ணுக்கே இரையாகினர்

### இந்தோனேசியாவில் துயரம்

(ஜகார்த்தா)

இந்தோனேசியாவில் உள்ள சுலவேசி தீவில் சட்டவிரோதமாக இயங்கி வந்த தங்கச் சுரங்கத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 12 பேர் உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை சுலவேசி தீவின் கோரோண்டாலோ பகுதியில் உள்ள போன் பொலாங்கோ என்ற இடத்தில் சட்டவிரோதமாக இயங்கி வந்த தங்கச் சுரங்கத் தில் உள்ள குறுகிய குழியில் 33 பேர் தங்கத்தை தோண்டியெடுக்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர்.






அப்போது திடீரென மேரோபகுதியில் இருந்த மண் சரிந்து குழிக்குள் இருந்தவர்கள் மீது விழுந்து அடைத்தது. இந்த விபத்தில் 12 பேர் மண்ணில் புதைந்து உயிரிழந்தனர். சம்பவ இடத்துக்கு விரைந்த மீட்புப் படையினர் 12 பேரின் உடல்களை மண்ணுக்குள் இருந்து மீட்டனர். இந்த விபத்தில் சிக்கிய மேலும் 18 பேர் மாயமான நிலையில் அவர்களை தேடும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. (க-6)

# சூடு பிடி...


- இடது சாரி...
- தொங்கு ப...
- இராஜினாம...

(பாரிஸ்) ——

நடந்து முடிந்த ...

எதிர்பாராத வகை...

நியூபாப்புவர் முன்ன...



# இஸ்ரேல் இராணுவ... இஹப் அல்குஸை...

(ஜெருசலேம்)

இஸ்ரேல் ராணுவம் நடத்திய வான் தாக்குதலில் ஹமாஸ் அமைப்பின் மூத்த அதிகாரி இஹாப் அல் குசைன் கொல்... வதேச... வெளிய...

காச... பாடசா...

# பங்கள... பாரிய ...

### பல இலட்ச...

(டாக்கா)

பங்காளதேசில் சில நாட்களாக கனமழை பெய்து வருகிற நிலையில் அங்குள்ள முக்கிய ஆறுகளில் வெள்ளம் கரை புரண்டு ஓடுகிறது. ஆற்றங்கரைகளில் வசிக்கும் பகுதிகளை வெள்ளம் சூழ்ந்துள்ளது.

இதனால் 20 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அந் நாட்டின் வடக்குப் பகுதியில் கடுமையாகப் பாதிக்கப் பட்டுள்ள மாவட்டங்களுக்கு உணவு மற்றும் நிவாரணப் பொருட்கள் அனுப்... தெரிவி...

மன... பேர் ... வங்க...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ...ழக்கும் பிரான்ஸ் தேர்தல் களம்

## ...ரிக் கூட்டணி முன்னிலை
## ...பாராளுமன்றத்திற்கு வாய்ப்பு!
## ...மா செய்த பிரதமர்

**...் பிரான்ஸ் பாராளுமன்றத் தேர்தலில் யாரும் ...கையில் இடதுசாரிக் கட்சிகளின் கூட்டமைப்பான ...னனி கூட்டமைப்பு முன்னிலை வகித்துள்ளது.**



கடந்த ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்றிருந்த முதலாவது சுற்றுத் தேர்தலில் தீவிர வலதுசாரிகள் அதிக ஆசனங்களை கைப்பற்றியிருந்த நிலையில் அதிகளவு ஆசனங்களை கைப்பற்றக்கூடும் என எதிர்பார்க்கப்பட்டிருந்து.

இந்நிலையில் இரண்டாவது சுற்று வாக்கெடுப்பில், யாரும் எதிர்பாராத வகையில், இடதுசாரிகள் கூட்டணி (New popular front) மொத்தமாக 182 ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது.

அத்துடன் பெரும் பின்னடவை சந்திக்கும் என எதிர்பார்க்கப்பட்ட ஜனாதிபதி இமானுவல் மேக்ரானின் கூட்டணி 163 ஆசனங்களையும், அறுதிப்பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு வரும் என்று கருதப்பட்ட தீவிர வலதுசாரிகள் கூட்டணி 143 ஆசனங்களுடன் மூன்றாமிடத்திற்கும் தள்ளப்பட்டுள்ளது.

பிரான்ஸில் கடந்த மாத தொடக்கத்தில் நடந்த ஐரோப்பிய யூனியன் தேர்தலில் தீவிர வலதுசாரி கட்சியான தேசியவாதப் பேரணிக் கட்சி தற்போதைய பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மேக்ரானின் மறுமலர்ச்சி கட்சியை விட அதிக வெற்றியை பதிவு செய்துள்ளது. இதனால் கலக்கமடடைந்த மேக்ரான் கடந்த ஜூன் 9 ஆம் திகதி பிரான்ஸ் அவசர அவசரமாக பாராளுமன்றத் தேர்தலை அறிவித்தார். அதன்படி கடந்த ஜூன் 30 ஆம் திகதி முதல் சுற்று பாராளுமன்றத் தேர்தல் நடந்தது. முதல் சுற்றில் அதிகபட்சமாக 67 சதவீத வாக்குகள் பதிவானது.

தற்போதய நிலவரப்படி ஆட்சியமைக்க யாருக்கும் பெரும்பான்மைக்கு தேவையான 289 இடங்கள் கிடைக்காததால் பிரான்ஸில் தொங்கு பாரா ளுமன்றம் அமையும் சூழல் ஏற்பட்டுள்ளது. இடது முன்னணியுடன் கூட்டணி வைத்தால் மட்டுமே தற்போதைய அதிபர் மேக்ரானின் மறுமலர்ச்சி கட்சி மீண்டும் ஆட்சிய மைக்க முடியும் என்ற சூழல் ஏற்பட்டுள்ளது. இந் நிலையில் பெரும் பான்மையை இழந்த மறுமலர்ச்சி கட்சியைச் சேர்ந்த பிரான்ஸ் பிரதம மந்திரி கேப்ரியல் அட்டல் ஜனாதிபதி மேக்ரானிடம் தனது ராஜினாமா கடிதத்தை வழாங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-6)



## ...ுவம் அதிரடி
## ...சைன் பலி

...ல்லப்பட்டுள்ளதாக சர் ...தச ஊடகங்கள் செய்தி ...ளியிட்டுள்ளன.

...காசா நகரில் உள்ள ...சாலை மீது இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் உயிரிழந்த நால்வரில் இஹாப் அல்-குசைனும் அடங்குவதாக கூறப்படுகிறது.

மேலும் கடந்த 9 மாதங்களில், இஸ்ரேலிய தாக்குதல்களால் ஹமாஸ் அமைப்பைச் சேர்ந்த பலர் கொல்லப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (க-6)

# ...ளாதேசில் ...வெள்ளம்

## ...ேசம் பேர் பாதிப்பு




...னுப்பப்பட்டுள்ளதாக அரசு ...ரிவித்துள்ளது.

...மழை-வெள்ளத்துக்கு 8 ...ர் பலியாகி உள்ளனர். ...ங்காளதேசத்தில் கோடை காலத்தில் பெய்யும் பருவ மழை, வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகளால் தொடர்ந்து பாதிப்பு ஏற்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (க-6)

# எதிர்ப்புறமாக சுழலும் பூமியின் மையப்பகுதி

## ஆய்வில் தகவல்



(வோஷிங்டன்)

பூமியின் மையமானது மெல்ல மெல்ல எதிர்த்திசையில் சுற்றத் தொடங்கியுள்ளதாக விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

இயற்கையாக உலகம் அதன் சுழற்சிப் பாதையில் சுற்றும் வேளையில் பூமியின் மையத்தில் உள்ள திடமான மெட்டல் மற்றும் நிக்கல் உலோகங்களால் ஆன INNER CORE என அழைக்கப்படும் பந்து போன்ற அமைப்பு தன்னிச்சையாக சுற்றி வருகிறது. நிலவின் அளவில் 70 சதவீதம் உள்ள இந்த உட்புற மைய உலோக பந்தின் சுழற்சி குறித்து கடந்த நூற்றாண்டு முதலே விஞ்ஞானிகள் தொடர்ந்து ஆய்வு செய்து விவாதங்கள் நிகழ்த்தி வருகின்றனர்.

இந் நிலையில்தான் கடந்த ஜூன் 12 ஆம் திகதி வெளியான NATURE ஆய்வு இதழில் வெளியான கட்டுரையில், பூமியின் இந்த மைய உலோக கோளத்தின் சுழற்சியில் சமீப காலங்களாக மாற்றம் ஏற்பட்டுள்ளதாக விஞ்ஞானிகள் கூறி வரும் கூற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

சுழற்சி மட்டுமின்றி இந்த மையப் பகுதியின் சுழற்சி வேகத்திலும் மாறுபாடு ஏற்பட்டுள்ளது. இதற்கு முன்னர் வெவ்வேறு கால கட்டங்களிலிலும் தற்போதும் பூமியில் உள்ள கடல் அலைகள், காற்று வீசுகின்ற தன்மைகளையும் பூமியில் ஏற்பட்ட பெரிய அளவிலான சக்தி வாய்ந்த நில நடுக்கங்களின் தரவுகளையும் கணக்கிட்டு பூமி அடுக்கில் உள்ள மையப் பகுதி எதிர்ப்புறமாக சுழலத் தொடங்கியுள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது.

நீ பெரிது, நான் பெரிது என உலகில் போர் மேகம் சுழலக் காரணமான மனித குலம் பூமியின் எதிர் சுழற் சியின் மூலம் முற்றாக அழிந்து போக வாய்ப்புகள் உள்ளதாகவும் விஞ்ஞானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (க-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகு சாதனப்பொருட்களால் ஆபத்து

(கொழும்பு)

**வயது, பாலின வேறுபாடின்றி சருமத்தை மிளிரச் செய்யும் அழகு சாதனப் பொருட்களைப் பயன்படுத்துவதனால் எதிர் காலத்தில் பாரிய விளைவுகளை எதிர் நோக்க நேரிடும் என இலங்கை பொது சுகாதாரப் பரிசோதகர் சங்கம் எச்சரித்துள்ளது**

நாட்டில் தற்போது பயன்படுத்தப்படும் அழகு சாதனப் பொருட்கள் தொடர்பான அறிக்கையிடர் ஒன்றிலேயே மேற்குறித்த கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக தெரிவிக்கையில் நாட்டில் அழகுசாதனப்பொருட்கள் தொடர்பில் முறையான கட்டுப்பாடுகள் இன்மையால் எதிர் காலத்தில் துரதிஷ்டமான நிலைமைகளுக்கு முகம் கொடுக்க நேரிடும்.

வயது பாலினம் என்ற வேறுபாடு இல்லாமல் சருமத்தின் நிறத்தை மிளிரச் செய்ய பல்வேறு வகையான அழகுசாதனப் பொருட்களைப் பயன்படுத்தும் போக்கு அதிகரித்துள்ளது.

இதன் காரணமாக எதிர் காலத்தில் உயிரிழப்புக்கள் ஏற்பட வாய்ப்புக்கள் உள்ளன. எனவே தரமற்ற அழகுசாதனப் பொருட்கள் தொடர்பில் அதிகாரிகள் உடனடியாக கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவ் அறிக்கையிடலில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கையில் பயன்படுத்தப்படும் அழகுசாதனப்பொருட்கள் மற்றும் உடலுக்குக் கேடான அதிக செறிவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளதாக அண்மையில் அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித் திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (க-6)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 300 | 250-350 | 250 |
| உருளைக்கிழங்கு | 200 | 240 | 230 | 250 |
| பச்சைமிளகாய் | 180 | 170 | 200 | 300 |
| தக்காளி | 350 | 450 | 350 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 150 | 50 | 100-130 | 200 |
| கோவா | 300 | 280 | 250 | 300 |
| கரட் | 350 | 500 | 250 | 600 |
| பூசணி | 170 | 160 | 150 | 200 |
| புடோல் | 140 | 250 | 200 | 200 |
| வாழைக்காய் | 250 | 240 | 150-200 | 200 |
| சின்ன வெங்காயம் | 400 | 450 | 300-450 | 400 |
| பெரிய வெங்காயம் | 250 | 240 | 250 | 200 |
| பாகற்காய் | 800 | 700 | 800 | 1000 |
| வெண்டக்காய் | 250 | 250 | 250 | 320 |
| கருணைக் கிழங்கு | 180 | 200 | 150 | 200 |
| பயற்றங்காய் | 350 | 300 | 300- 400 | 350 |
| லீக்ஸ் | 600 | 450 | 350 | 600 |
| பீற்றூட் | 800 | 450 | 500 | 500 |
| கறிமிளகாய் | 600 | 750 | 500 | 800 |
| முருங்கைக்காய் | 600 | 600 | 400-600 | 800 |
| போஞ்சி | 800 | 700 | 400 | 600 |
| கத்தரி தம்புள்ள | 250 | 250 | -- | 240 |
| கீரை - 1 பிடி | 80 | 80 | 60 | 50 |
| தேசிக்காய் | 600 | 800 | 600-700 | 800 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 120 | 60-120 | 80-120 |
| இராசவள்ளி | 350 | 450 | -- | 500 |
| வெங்காயப்பூ | 300 | 300 | -- | 400 |
| முள்ளங்கி | 120 | 160 | 150 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 90 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 80 | 80 | 80 |
| ஈரப்பலா | 100 | 80 | 100 | 100 |

# இன்று ஒரு தகவல் 177



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

## காது

சத்தமில்லாமல் மனிதனைக் கொல்லக் கூடியது எது? என்று கேட்டார் ஒருவர், எனக்கு தெரியவில்லை நீங்களே சொல்லுங்கள் என்றார் இன்னொருவர். மனிதனை சத்தமில்லாமல் கொல்லக் கூடியது சத்தம் தான் என்றார். கேட்டவருக்கு ஒரே ஆச்சரியமாகப் போய்விட்டது. இதிலே ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. தொடர்ந்து சத்தத்திற்கு மத்தியிலே நாம் இருந்தோம் என்றால் கொஞ்சம் கொஞ்சமாக காது கேட்காமல் போய்விடும். அதுட்டுமில்லை வேற சில பாதிப்புக்களும் வந்துவிடும். இருதயத்துடிப்பு அதிகரித்து விடும். இரத்தக்கொதிப்பு அதிகரித்து விடும். peptic alcer வரும். ஒவ்வாமை வரும்.

நரம்புத்தளர்ச்சி உண்டாகும். இப்போது எல்லாம் விடுமுறை நாளை உபயோகப்படுத்துகின்ற முறை ஆனால் உண்மையான ஓய்வு என்பது அது இல்லை. சத்தமில்லாத சூழ்நிலையிலே மன அமைதியோடு நேரத்தைக் கழிக்க வேண்டும். அது தான் ஓய்வு.

நிறைய வேலை செய்கின்ற ஜப்பான்காரர்கள் இப்படி தான் ஓய்வு எடுக்கின்றார்கள். இதற்கு உபயோகப் படுத்துவதற்காகவே silence அப்படி என்று பல அறைகளைக் கட்டி வைத்திருக்கின்றார்கள். உள்ளே போனால் ஒரு சத்தமும் கேட்காது. அவர்கள் எல்லாம் silence room கட்டுகிறார்கள். நாங்கள் எல்லாம் roomலேயே silence please என்று எழுதி வைக்கின்றோம். அதெல்லாம் இருக்கட்டும். நமக்குள்ளே பல பேர் சத்தத்திற்கு மத்தியிலே இருக்க வேண்டிய கட்டாயம் இருக்கிறது. அவர்களின் காதினைக் காப்பற்றுவதற்கு ஏதாவது வழி உண்டா? உண்டு.

இந்திய விஞ்ஞானிகள் இதற்கு ஒரு வழி கண்டுபிடித்திருக்கின்றார்கள். (defence institute of physiology and allied science - DIPAS new delhi) அதாவது வாயுவை சுவாசித்தால் காது கேட்காமல் போவதை தவிர்த்து விடலாம். வாயு என்றால் என்ன? பிராணவாயு95%, கரியமிலவாயு 5% இது இரண்டும் சேர்ந்த கலவை தான் .சத்தம் அதிகம் உள்ள இடங்களில் வேலை செய்பவர்கள் வேலைக்கு போவதற்கு முன்னாலோ பின்னாலோ கொஞ்ச நேரம் அந்தக் கலவையை சுவாசித்தால் போதும் காதிற்கு ஒன்றும் கெடுதல் வராது.

அது சரி மனித உடம்பிலே தான் எது போனாலும் செயற்கையாக அதை பொருத்திக் கொள்கின்ற வசதி வந்துவிட்டதே. அதுமாதிரி செயற்கையாக காது செய்து வைத்துவிட்டால் என்ன? அதுவும் செய்யலாம். பிறவியிலே காது கேட்காமல் போனவர்களெல்லாம் இப்படி செயற்கை காது வைத்திருக்கிறார்களாம். அவுஸ்திரேலிய விஞ்ஞானிகள் இதனை கண்டு பிடித்திருக்கிறார்கள்.

எங்கள் காதிலே காக்லியாஎன்ற ஒரு பகுதி உண்டு. நத்தை ஓடு மாதிரி இருக்கும். அதற்குள்ளே 10 000இற்கு மேலே haircells இருக்கிறது. இவை எல்லாம் என்ன செய்கின்றது என்றால் ஒலி அலைகளை ஆக மாற்றுகிறது. இந்த மின் அலைகள் நரம்புகளைத் தூண்டுகின்றபோது தான் நாம் சத்தத்தைக் கேட்கிறோம். காது கேட்காதவர்களுக்கு என்ன செய்கின்றார்கள் என்றால் 22 சிறிய electrode களை அந்த haircells இற்குப் பதிலாக பொருத்தி விடுகின்றார்கள். அவ்வளவு தான் காது கேட்க ஆரம்பித்து விடும்.

இந்தக் கருவி என்ன செய்கின்றது என்றால் microphone ஒலி அலைகளை எடுத்து processorஇற்கு செலுத்துகிறது. இந்த processor வேறு வேறு frequencyஆக filter செய்து receiverஒன்றிற்கு அனுப்புகின்றது. அப்படி பிரித்தெடுக்கப்பட்ட frequency cochlea வில் பொருத்தப்பட்டிருக்கிற electrode களுக்கு இதை அனுப்பி வைக்கிறது. இப்படி பிரித்தெடுக்கப்படுகின்ற frequency cochlea பொருத்தப்பட்ட electrode களுக்கு இதை அனுப்பி வைக்கிறது. நன்றாக காது கேட்க ஆரம்பிக்கின்றது.

ஒருவர் காதைக் காப்பற்ற வேண்டும் என்பதில் மிகவும் அக்கறையுள்ளவர். இருந்ததாலும் சத்தம் அதிகமாக உள்ள தொழிற்சாலையிலே அவர் மனேஜர். வேறு வழியில்லாமல் போய்வந்து கொண்டிருந்தார்.


ஒரு நாள் வேலை முடிந்து ஒரு நகர பேருந்து மூலம் கிராமத்திற்கு திரும்பி வந்து கொண்டிருந்தார். அவருக்கு அருகிலே இருந்தவர் சுவாரசியமாக எதையோ பேசிக்கொண்டே வந்தார். இவருக்கு அவர் பேசுவது சுத்தமாக காதிலே விழவில்லை. மிகவும் பயந்து போய்விட்டார். இருந்தாலும் அதையெல்லாம் வெளியே காட்டிக்கொள்ளாமல் அவர் சொல்வற்கு எல்லாம் தலையை ஆட்டிக் கொண்டே வந்தார்.

கடைசியாக பேருந்து நின்றது. இவர் இறங்கினார் அவரும் இறங்கினார். இவர் அவரிடம் தனது குறையை காட்டிக்கொள்ளாமல் கௌரவமாக சார் நீங்கள் என்னிடம் வழி நெடுக நிறைய கதைத்துக் கொண்டே வந்தீர்கள் .

எல்லாமே மிகவும் அபூர்வமான விடயங்கள் மிகவும் நன்றி என்றார். அதற்கு அவர் நான் எங்கே உங்களிடம் பேசிக்கொண்டு வந்தேன். வாயிலே சூயின்கம் வைத்துக் கொண்டு அதைத்தானே அசைபோட்டுக் கொண்டு வந்தேன் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனைக்கோட்டையில் நடைபெறும் தொல்லியல் ஆய்வு- பூர்வாங்க அறிக்கை



இலங்கையின் பூர்வீகக் குடியிருப்பு மையங்கள் பற்றி தென்னாசிய தொல்லியலாளர்களால் அறியப்பட்ட இடங்களில் ஒன்றாக ஆனைக்கோட்டை காணப்படுகிறது.

இதற்கு முக்கிய காரணம் 1980 ஆம் ஆண்டு பேராசிரியர் ரகுபதி அவர்களால் அடையாளப்படுத்தப்பட்டு பின்னர் பேராசிரியர் இந்திரபாலா, பேராசிரியர் சிற்றம்பலம்,பேராசிரியர் கிருஷ்ணராஜா ஆகியோரும் மற்றும் பொருளியல், புவியியல், தமிழ்த்துறை ஆசிரியர்களதும் மாணவர்களதும் பங்களிப்போடு மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் யாழ்ப்பாணத்தில் முதல் முறையாக 2300 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த இரண்டு மனித எலும்பு கூடுகளும் அதன் ஒரு எலும்புக்கூட்டின் தலை மாட்டுப்பகுதியில் 2300 ஆண்டுகளுக்கு முற்பட்ட முத்திரை மோதிரம் ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டன.

ஆனால் அந்த அகழ்வாய்வில் கண்டுபிடிக்கப்பட்ட அனைத்து தொல் பொருட்களையும் 1978 ஆம் ஆண்டு நாம் முழுமையாக இழந்துவிட்டோம். கண்டுபிடிக்கப்பட்ட இடத்தை பார்வையிடுவதற்கு பிறர் வருகின்ற போது பெருமையோடு காட்டக் கூடிய அளவுக்கு ஆனைக்கோட்டையின் அகழ்வு இடம் கருத்தில் கொள்ளக்கூடியதாக இன்று வரை இருக்கவில்லை.

இந்த நிலையில் தான் 1980 களின் பின்னர் பலரான கோட்டையில் அகழ்வு செய்யப்பட உண்டு மகிழ்வு செய்யப்பட வேண்டும் என்று விரும்பி இருந்தாலும் அந்த விருப்பம் 44 ஆண்டுகளுக்கு பின்னர் இப்பொழுதுதான் நடைமுறைக்கு வந்துள்ளது.

1980 களில் இலங்கையில் மட்டுமின்றி தென்னாசியாவிலும் அகழ்வாய்வுக்குரிய நவீன தொழில் நுட்ப வசதிகள் இருக்கவில்லை.

இப்பொழுது நவீன தொழில் நுட்ப வசதிகள் பல மாற்றங்களோடு வளர்ச்சி அடைந்துள்ளன. அந்த வசதிகள் அனைத்தையும் நாம் பயன்படுத்துகிறோம் என்று பெருமை கொள்ளாவிட்டாலும் முடிந்த அளவு நவீன வசதிகளையும் வாய்ப்புகளையும் பயன்படுத்தி யாழ்ப்பாணத்தில் ஒரு விஞ்ஞான பூர்வமான மிகப்பெரிய ·ஒரு அகழ்வாராய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதில் நாம் திருப்தி அடைய இடம் உண்டு.

ஆனைக்கோட்டையில் இந்த அகழ்வாராய்ச்சியானது 20.06.2024 இல் சம்பிரதாயபூர்வமாகத் தொடங்கிய பொழுது அதனை முக்கியப்படுத்தி ஊடகங்கள் பலவற்றில் செய்திகள் வெளிவந்தன. ஆனால் இரண்டு வாரங்கள் கழிந்தும் அங்கு என்ன நடக்கிறது என்ற கேள்வி பலருக்கு எழுகின்ற அதே நேரத்தில் ஒன்றும் கிடைக்கவில்லை. அதனால் தான் ஊடகங்களில் அது பற்றிய செய்திகள் வெளியிடப்படவில்லை என்ற விமர்சனங்களும் வருகின்றன.

இந்த நிலையில் இரண்டு மூன்று தினங்களுக்கு முன்பிருந்து பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பொது நலன் விரும்பிகள், ஆர்வலர்கள் எனப் பலரும் அங்கு வருகை தந்திருக்கின்றார்கள். அவர்கள் அங்கு வந்து சில புகைப்படங்களை எடுத்து தமது முக நூல்களில் பதிவேற்றம் செய்திருக்கிறார்கள்.எனினும் நாங்கள் எங்களுடைய செய்திகளை இதுவரை உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை.


அதற்கு முக்கிய காரணம் இலங்கைத் தொல்லியல் சட்டத்தில் ஓர் அகழ்வாய்வுக்கு அனுமதி வழங்குகின்ற பொழுது, பன்னிரண்டுக்கும் மேற்பட்ட நிபந்தனைகள் விதிக்கப்படுகின்றன.

இந்த நிபந்தனைகள் பொதுவானவை. அதில் ஒரு நிபந்தனை அகழ்வாய்வு முடிந்து அதன் பெறுபேறுகள் சரியாக ஆவணப்படுத்துவதற்கு முன்னர் அதுபற்றிய செய்திகளை வெளியிடக்கூடாது என்பதாகும்.

நாங்கள் ஒரு தொல்லியல் ஆய்வாளர் என்ற வகையில் தொல்லியல் கட்டுப்பாடுகளுக்கு கட்டுண்டு நடக்கும் பொருட்டு, நாங்கள் இதுவரை செய்திகளை வெளியிடவில்லை.

எனினும் அங்கு என்ன நடைபெறுகிறது என்பதை பொதுமக்கள் தெரிந்து கொள்வதும் அதை இட்டு ஊடகவியலாளர்கள் மிகுந்த ஆர்வத்தோடு கேள்வி எழுப்புவதும் விசாரணை செய்வதும் எங்களுக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. அவற்றை ஓரளவு பூர்த்தி செய்யும் வகையில் சில விடயங்களை இங்கே நாங்கள் குறிப்பிடக் கூடியதாக இருக்கிறது.

இதுவரை ஆனைக்கோட்டையில் ஏறத்தாள 9 அடிக்கு மேல் 11 கலாச்சார மண்ணடுக்குகள் கண்டறியப்பட்டுள்ளன. நாலாவது கலாச்சாரமண்ணடுக்கில் பெறுமதியான பல தொல்பொருள் சான்றுகள் வருகின்றன. அந்தத் தொல்பொருள் சான்றுகளை தொடர்ந்து அகழ்வு செய்யப்படுகின்ற போது



ஆனைக்கோட்டையில் ஏற்கனவே கண்டுபிடிக்கப்பட்ட ஆதி இரும்புக்கால அல்லது பெருங்கற்காலப் பண்பாட்டு மக்கள் வாழ்ந்துள்ளார்கள் என்பதை உறுதி செய்யக் கூடியதாக இருக்கும்.

அது மட்டுமல்லாமல் முன்னைய ஆய்வுகளில் கிடைக்காத அரியவகையான பல சான்றாதாரங்களும் கிடைக்கின்றன. இதில் அயல் நாடுகளுக்கும ஆனைக்கோட்டைக்கும் இடையிலான தொடர்புகளையும் உறவுகளை அறியக் கூடிய சான்றுகளும் காணப்படுகின்றன.

இந்த நிலையில் ஆனைக்கோட்டையில் கிடைக்கின்ற சான்றுகளை வைத்து பார்க்கும் போது, 1970களில் விமலா பேக்லி என்ற பெஞ்சுவேனிய பல்கலைக் கழக அரும்பொருள் ஆய்வாளர் கந்தரோடையில் அகழ்வு செய்த போது,



வாழ்நாள் பேராசிரியர்
ப.புஷ்பரட்ணம் (வரலாற்றுத்துறை)

அவற்றின் கண்டுபிடிப்புகளை வைத்து கந்தரோடையில் வாழ்ந்த பூர்வீக மக்கள் தமிழகத்தில் இருந்து வந்திருக்கலாம் அல்லது இங்கு வாழ்ந்த மக்கள் தமிழகத்து மக்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கலாம்.

இந்த பண்பாட்டுக்குரிய மக்கள், கந்தரோடையிலிருந்து புத்தளம் வரை பரவி வாழ்ந்திருக்கலாம் என்று ஒரு கருத்தை முன் வைத்தார்.

அந்தக் கருத்தை எமது அகழ்வுகள் மேலும் உறுதி செய்கின்ற அதே நேரத்தில், இந்த பண்பாட்டுக்கு முன்னரும் மக்கள் வாழ்ந்து இருக்கலாம் என்ற ஒரு சமிக்ஞை அல்லது சில ஆதாரங்கள் கிடைக்கின்ற வாய்ப்பு உண்டு.

தொடர்ந்தும் நாங்கள் அகழ்வு செய்யும் பொழுது தான் அவற்றை உறுதிப்படுத்தலாம். இந்த அகழ்வின் போது கண்டறியப்பட்ட சில மாதிரிகளை நாங்கள் நவீன காலக் கணிப்புக்கு உட்படுத்த இருக்கின்றோம்.

அந்தக் காலக் கணிப்புகள் மூலம் ஆனைக்கோட்டையின் பூர்வீக-தொன்மையான நாகரிகம் எப்போதிருந்து வளர்ந்து வருகிறது என்ற உண்மைகள் வெளிவரும் என்ற நம்பிக்கை இருக்கின்றது.

அகழ்வாய்வு முடிந்து ஓரிரு வாரங்களுக்குள் நாங்கள் அறிக்கையாக-நூலாக தொல்லியல் திணைக்களத்துக்கு சமர்ப்பிப்போம். அங்கு கண்டுபிடிக்கப்பட்ட அனைத்து ஆதாரங்களுக்குமான உண்மைகளை மக்களுக்கும் ஊடகங்களுக்கும் தெரியப்படுத்துவோம்.

அதுவரை இந்த அகழ்வு பற்றி- அங்கு கிடைத்த ஆதாரங்கள் பற்றி நாங்கள் வெளியிடுவது தொல்லியல் சட்ட விதிகளுக்கு முரணானது என்பதனால் அதை நாங்கள் மதித்து இந்த அகழ்வை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 528





ஆமாம் நீ? நானும் பாண்டிய நாட்டாள். சற்று முன் நான் சொன்ன ஊமை, சோழ நாட்டவள். ஆகையால்.

"இருந்தாலும் பாதகமில்லை உன்னைப் போல் இன்னும் சிலரும் அவளைப் பற்றி எனக்குச் சொல்லியிருக்கிறார்கள்.

அவளை என்னிடம் அழைத்து வருகிறாயா? அழைத்து வந்தால் உனக்கு வேண்டிய பொருள் தருவேன்."

"ராணி! அவளை அழைத்து வருவது சுழற்காற்றை அழைத்து வருவது போலத் தான். இருந்த இடத்தில் அவள் இருக்கமாட்டாள். பிறர் சொல்லுவதையும் கேட்கமாட்டாள். வெறிபிடித்தவள் என்று சொன்னேனே.

சரி! நீ எதற்காக இப்போது வந்தாய்? அதையாவது சொல்! "ராணி! சில நாளைக்கு முன்பு இரண்டு பேர் இங்கே வந்தார்கள். தங்கள் பெயரைச் சொன்னார்கள்.

என் பெயரை ஏன் சொன்னார்கள்? தங்கள் காரியத்துக்காக அவசரமாக இலங்கைக்குப் போக வேண்டும் என்றார்கள். என் புருஷனை அவர்களுக்குப் படகோட்ட அனுப்பி வைத்தேன்.

திரும்பி வந்து விட்டானா?" "வரவில்லை. அதுதான் கவலையாயிருக்கிறது, அவருக்கு ஏதாவது நேர்ந்திருந்தால்"

"ஒன்றும் நேராது கவலைப்படாதே! அப்படி ஏதாவது நேரிட்டிருந்தால் உன்னை நான் பார்த்துக் கொள்கிறேன். படகிலே போன மனிதர்களைப் பற்றி ஏதாவது தெரியுமா?"

"அவர்கள் திரும்பி வந்து விட்டார்கள். சற்றுமுன் ஆந்தையின் குரல் கேட்டதே! அதைக் கவனிக்கவில்லையா?"

கவனித்தேன். அதனால் என்ன? அது மந்திரவாதியின் குரல் என்று தெரிந்து கொள்ளவில்லையா? உனக்கு எப்படி அது தெரியும், நீ மந்திரவாதியைச் சேர்ந்தவளா?"

"ஆமாம், ராணி!" என்று சொல்லிவிட்டு, ராக்கம்மாள் கையினால் கோலம் போட்டுக் காட்டினாள்.

நந்தினி அவளை வியப்புடன் உற்றுப் பார்த்து விட்டு "இப்போது அவர்கள் எங்கே இருக்கிறார்கள்? உனக்குத் தெரியுமா?" என்று கேட்டாள்.

"மந்திரவாதி தங்களைப் பார்ப்பதற்காகக் காத்திருக்கிறார்." "என்னை வந்து பார்ப்பதுதானே? எதற்காக காத்திருக்க வேண்டும்?"

"இப்போது இங்கு வந்த பல்லவனை மந்திரவாதி சந்திக்க விரும்பவில்லை. ஈழத்தில் அவனை பார்த்தாராம். தங்கள் கணவரைப் பார்க்கவும் விரும்பவில்லை."

"மந்திரவாதியை நீ பார்த்தாயா?" "சற்றுமுன் ஆந்தைக் குரல் கேட்டுப் போயிருந்தேன். தங்களை அழைத்து வரும்படி சொன்னார். குழகர் கோயிலுக்கருகில் ஓடைக் கரையில் ஒளிந்திருப்பதாகச் சொன்னார். வருகிறீர்களா ராணி?"

அது எப்படி நான் போக முடியும்? குழகர் கோவிலுக்குப் போவதாகச் சொல்லி விட்டுப் போகலாம். நல்ல யோசனைதான் வேறு துணை வேண்டாமா? அவசியமில்லை! வேண்டுமானால் சேந்தன் அமுதனைத் துணைக்கு அழைத்துப் போகலாம்."

அவன் யார்? தஞ்சவூர் ஊமையின் மகன்! சிவசிவ ! எத்தனை ஊமைகள்?

இந்தக் குடும்பம் சாபக் கேடு அடைந்த குடும்பம். சில பிறவி ஊமைகள் சில வாய் இருந்தும் ஊமைகள்.

என் புருசன் அப்படி அருமையாகத் தான் பேசுவார். நான் தான் பேச வேண்டாம் என்று திட்டம் செய்து இருக்கிறேன்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## குயவன் கூறிய உண்மை!



பானைகளைச் செய்து விற்கும் குயவன் ஒருவன் ஒரு குப்பத்தில் வாழ்ந்து வந்தான். ஒருநாள் அவன் தான் செய்த பானைகளைப் பரணில் அடுக்கி வைக்கும்போது, ஒரு தேங்காய் ஓடு அவன் தலையில் வந்து விழுந்தது. தலையில் காயம் ஏற்பட்டது. பின்னாளில் அந்தக் காயம் ஒரு பெரிய தழும்பாக மாறி விட்டது.

ஒருமுறை அந்தக் குப்பத்தில் பஞ்சம் ஏற்பட, அந்தக் குயவன் வேறு ஒரு நாட்டிற்குச் சென்று, தன் குலத் தொழிலைச் செய்யாமல், அந்த நாட்டின் அரண்மனையில் சேவகனாகப் பணிக்குச் சேர்ந்தான். ராஜா தன் சேவகர்களைப் பார்வையிடும் போது, இவன் தலையில் பெரிய தழும்பு இருப்பதனைப் பார்த்தார். இவன் முன்பு ஏதாவது ஒரு படையில் சிறந்த வீரனாக இரு[illegible]பான் என்று நினை[illegible] அவனுக்கு அதிக ஊதியமும் மதிப்பு மிக்க பதவியும் அளித்தார்.

ஒருநாள் குயவன் தனிமையில் ராஜாவுக்கு பணிவிடை செய்த சமயத்தில் ராஜா அவனிடம் உன் [illegible] களத்தில் ஏற்பட்டது? என்று கேட்டார்.

எதற்காக ராஜா கேட்கிறார் என்பதைப் புரிந்துக் கொள்ளாதக் குயவன், ராஜா எனக்கும் போர்க்களத்திற்கும் என்ன சம்பந்தமும் இல்லை. நான் ஒரு பானை செய்யும் குயவன் தானே! என் தலையில் ஒரு தேங்காய் ஓடு விழுந்து காயப்படுத்தி விட்டது. அந்தக் காயம் பின்னாளில் தழும்பாக மாறிவிட்டது என்று நடந்த உண்மையை அப்படியே சொன்னான்.

ராஜாவுக்குக் கடுமையான கோபம் வந்தது. இவனைப் போய் பெரிய வீரனென்று நினைத்து ஏமாந்தோமே என்று அவருக்கு அவமானமாகவும் இருந்தது. இந்த விடயம் மற்றவர்களுக்குத் தெரிந்தால் அவர்கள் என்னை எவ்வளவு கேவலமாக நினைப்பார்கள்? என்று நினைத்த ராஜா, குயவனிடம் உன்னைப் பற்றிய இந்த விடயம் மற்றவர்களுக்குத் தெரியும் முன்பாக இந்த நாட்டைவிட்டே ஓடிவிடு என்று ஆணையிட்டார்.

குயவனுக்குத் தான் செய்த தவறு இப்போது தான் புரிந்தது. உடனே அவன், ராஜா என் கைகளிலும் கால்களிலும் உள்ள வெட்டுக் காயங்களைப் பாருங்கள். இவை ஒரு போர்களத்தில் ஏற்பட்டவை தான் என்று பொய் கூறினான்.

ராஜா அவன் வார்த்தைகளை நம்பவில்லை. பொய் சொல்லாதே! நீ பிறந்த குலம் போர்க்களத்தில் வருவதில்லை. இங்கு இருப்பவர்கள் யாரும் நீ போர் வீரன் அல்ல, ஒரு குயவன் என்பதனை அறிந்து கொள்வதற்கு முன்பாக ஓடிவிடு என்று எச்சரித்தார் ராஜா.

நீதி : பேசும் முன் யோசித்துப் பேச வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையைக் காண்பது கடினமல்ல; அதைக் கண்டதும் கைவிட்டுவிட்டு ஓடாமலிருப்பதுதான் கடினம்.
– ஏட்ரியன் சில்ஸன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சாவகச்சேரி வைத்தியசாலையில் மக்கள் திரண்டெழுந்தது ஏன்?

இதுவரையும் பேசாப்பொருளாக இருந்த சாவகச்சேரி வைத்தியசாலையில் இரவென்றும் பாராமல் மக்கள் திரண்டெழுகின்றனர். பொலிஸார் குவிக்கப்படுகின்றனர்.

என்ன சங்கதி. அரசுக்கு எதிரான விடயமா? அல்லது வன்முறைச் சம்பவமா? இல்லை எதுவும் இல்லை.

ஒரு வைத்திய அதிகாரி தனது முகநூலில் முன்வைத்த கருத்துக்கள் – கேள்விகள் – நியாயங்கள் சார்ந்து அதனை ஏற்றுக் கொண்ட மக்கள் அங்கு திரண்டெழுகின்றனர்.

அந்த மக்களின் போராட்டம் வைத்தியசாலையைத் தரமுயர்த்து என்றோ, 24 மணிநேர சேவையை வழங்கு என்பதாகவோ இருக்கவில்லை.

மாறாக, எங்களுக்காகக் குரல் கொடுத்த சாவகச்சேரி வைத்தியசாலையின் பதில் வைத்திய அத்தியட்சகர் மருத்துவர் இராமநாதன் அர்ச்சுனாவுக்கு எதிராக சுகாதாரத் திணைக்களம் நடவடிக்கை எடுக்கக்கூடாது. அவரை இடமாற்றம் செய்யலாகாது.

அர்ச்சுனா போன்ற மருத்துவர்களே எமக்குத் தேவை. இதற்காகவே தென்மராட்சி மக்கள் திரண்டு நிற்கின்றனர்.

இந்தச் சம்பவத்துக்கு தனியொரு மருத்துவரின் முகநூல் பதிவேற்றம் மட்டுமே காரணம் என்று யாரேனும் கருதிவிடாதீர்கள்.

மாறாக, சாவகச்சேரி வைத்தியசாலையில் உரிய சேவைகள் வழங்கப்படவில்லை என்ற மனக்குறை அப்பகுதி மக்கள் அனைவரிடமும் அலைமோதிக் கொண்டிருந்தது.

அந்த நேரத்தில் மருத்துவர் அர்ச்சுனா; அந்த மக்களின் உள்ளக்கிடக்கைகளில் தீயாய் மூண்டிருந்த கனலை வெளிப்படுத்துகிறார். அவ்வளவுதான்.

மருத்துவர் அர்ச்சுனாவின் அதே கருத்தை எந்தவொரு மருத்துவர் முன்வைத்தாலும் அதற்காக அந்த மக்கள் திரண்டிருப்பர். இதுதான் உண்மை.

இதை நாம் கூறும்போது, மருத்துவர் அர்ச்சுனாவின் அத்தனை அணுகுமுறைகளும் சரியானவை என்பது நம் கருத்தன்று.

ஒரு மருத்துவருடன் தொலைபேசியில் சம்பாசித்த உரையாடலை அவர் சமூக வலைத்தளங்களில் பதிவேற்றம் செய்தமை ஏற்புடையதல்ல.

ஆனாலும் சாவகச்சேரி வைத்தியசாலை தொடர்பில் மருத்துவர் அர்ச்சுனா முன்வைத்த விடயங்கள் உண்மையானவை. அதில் நியாயம் இருக்கிறது. அவரின் கருத்துக்கள் பொதுமக்களின் நலன்சார்ந்தவை என்பதை எவரும் நிராகரிக்க முடியாது.

சிலவேளைகளில் சிலர் அதை விமர்சிக்கலாம். வாதப் பொருளாக்கலாம். ஆனால் பொதுமக்கள் அதனை ஏற்றுள்ளனர். அதனாலேயே சுகாதாரத்துறை சார்ந்து வடமாகாணத்தில் ஒருபோதும் நடக்காத ஒரு பெரும் மக்கள் போராட்டம் சாவகச்சேரி வைத்தியசாலை வரலாற்றில் இடம்பெற்றுள்ளது.

இவ்விதம் மக்கள் திரண்டெழுந்து இரவு, பகல் பாராமல் போராட்டம் நடத்துவதற்கு மூலகாரணம், எங்கள் சுகாதார சேவையில் இருக்கக்கூடிய தொய்வுகளும் உயர் அதிகாரிகள் சிலரின் நேர்மையீனங்களும் தனியார் வைத்தியசாலைகளை நோக்கி மக்களை நகர்த்துகின்ற மறைமுக மருத்துவ வியாபாரமும் என்பது புரிதற்குரியது.

ஆக, இனி சாவகச்சேரி வைத்தியசாலையில் நடந்த மக்கள் போராட்டம் **அரகல** போல வட மாகாண வைத்தியசாலைகளை நோக்கி நகர்வடையலாம் என்பதால், முன்கூட்டியே வைத்தியசாலை நிர்வாகங்களை செம்மையாக்குங்கள்.

# அணிசேரா நாடு என்ற கொள்கையை இலங்கை தொடர்ந்து கடைப்பிடிக்கும்

## வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி

இலங்கை அணிசேரா நாடு என்ற கொள்கையை, தொடர்ந்தும் உறுதியாகக் கடைப்பிடிப்பதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி மீண்டும் தெரிவித்துள்ளார்.

சிங்கப்பூருக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அவர், ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியொன்றிலேயே இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை மேற்கு, கிழக்கு என எந்தவொரு பக்கங்களையும் ஏற்காது. சீனா, இந்தியா மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகள் இந்தோ பசிபிக் வலயத்தில் அதிகாரத்திற்காகப் போட்டியிடுகின்றன.

இதன்போது, நாட்டுக்கும் வலயத்திற்கும் ஏற்றவாறான சரியான முடிவை இலங்கை எடுக்கும் என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார். (ம-7)

# மேலும் 14 துறைகளுக்கு வரி அறவீடு செய்ய தீர்மானம்

இதுவரையில் கவனம் செலுத்தாத 14 துறைகளில் வரி அறவீடு செய்ய தீர்மானித்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

கேகாலையில் இது குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், பாரிய அளவிலான மேலதிக வகுப்புகள், தனியார் பாடசாலைகள், தனியார் மருத்துவ சேவைகள், பொறியியல் சேவைகள், நில அளவை சேவைகள் இதில் உள்ளடங்குவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அந்தத் துறைகளில் பதிவு செய்யப்பட்ட அனைவரின் வருமானம் குறித்து உள்நாட்டு வருமான வரித் திணைக்களம் தெளிவான விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர், வரி செலுத்துவதைத் தவிர்க்க எவருக்கும் சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது என்றும் கூறினார். (ம-7)

# பாதாளக் கும்பலைச் சேர்ந்த மேலும் இருவர் கைது

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் பாதாள உலக கும்பலைச் சேர்ந்த மேலும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாதாள உலகச் செயற்பாடுகளை ஒடுக்குவதற்காக உருவாக்கப்பட்ட 20 விசேட குழுக்களால் இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேல் மாகாணத்தின் தெற்கு பிராந்திய பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினரின் சுற்றிவளைப்பில் ஹோகந்தர பகுதியைச் சேர்ந்த 34 வயதுடைய சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

காலி பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினரின் சுற்றிவளைப்பில் அம்பலாங்கொடை பகுதியைச் சேர்ந்த 42 வயதுடைய சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த மார்ச் மாதம் 19ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்த சுற்றிவளைப்பில் இதுவரை பாதாள உலக கும்பலைச் சேர்ந்த 2,142 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7)

# மின் கட்டணத்தை குறைக்க தீர்மானம்

இம்மாதம் 16ஆம் திகதி முதல் மின் கட்டணத்தை குறைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

விலைத்திருத்தத்தில் மேற்கொள்ளப்படும் மாற்றம் தொடர்பான இறுதித் தீர்மானம் எதிர்வரும் 15ஆம் திகதி அறிவிக்கப்படும் என பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் மஞ்சுள பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். (ம-7)

### வடமாகாண ஆளுநரால்

# பட்டதாரிகள் 13 பேருக்கு

## ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த கல்விமாணி பட்டதாரிகள் 13 பேருக்கு, ஆளுநர் பி. எஸ். எம். சார்ள்ஸ் அவர்களால் நேற்று ஆசிரியர் நியமனம் வழங்கி வைக்கப்பட்டது.

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் ஆசிரியர் நியமனம் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

தாம் கற்றுக்கொண்ட நுட்பங்களை பாடசாலைகளில் பயன்படுத்தி, கற்பித்தல் செயற்பாடுகளில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என இதன்போது ஆளுநர் தெரிவித்தார்.

அதனூடாக கல்வித் தரத்தை பேணுவதுடன், மாணவர்கள் இலகுவாக கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என ஆளுநர் கூறினார்.

மாணவர்கள் பாடசாலைக்கு விரும்பி வருகை தரும் வகையில் வகுப்பறைகள் மாற்றப்பட வேண்டும் எனவும், மாணவர்களின் முன்மாதிரிகளாக ஆசிரியர்கள் திகழ வேண்டும் எனவும் ஆளுநர் தெரிவித்தார்.

வடக்கிலுள்ள ஆரம்ப மற்றும் இடைநிலை பாடசாலைகளுக்கு நேற்று நியமனம் வழங்கப்பட்ட புதிய ஆசிரியர்கள் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் புதிய ஆசிரியர்கள், தங்களுக்கு நியமனம் வழங்கப்படும் பாடசாலைகளில் கடமைகளை பொறுப்பேற்க வேண்டும் என பணிக்கப்பட்டுள்ளனர். (ம-7,33)

# மட்டக்களப்பில் குருக்கள்மடம் கடற்கரையில் பெண் ஒருவரின் சடலம் மீட்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு – களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குருக்கள்மடம் கடற்கரையிலிருந்து நேற்றையதினம் பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

கடற்கரையில் பெண் ஒருவரின் சடலம் கரை ஒதுங்கியுள்ளதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து அந்த இடத்திற்கு விரைந்த பொலிஸார் சடலத்தை மீட்டுள்ளனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் 40 வயது மதிக்கத்தக்க பெண் என களுவாஞ்சிகுடி பொலிஸ் தெரிவித்தனர்.

இதுவரையில் சடலம் அடையாளம் காணப்படாத நிலையில், சடலத்தை அடையாளம் காண்பதற்கு பொலிஸ் பொதுமக்களின் உதவியை நாடியுள்ளனர். (ம-7)

# யானை தாக்கியதில் இளைஞன் உயிரிழப்பு

(மஹியங்கனை)

மகியங்கனையில் காட்டு யானை தாக்கியதில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 12.30 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மகியங்கனை, பெலிகல்ல பகுதியைச் சேர்ந்த 19 வயதுடைய இளைஞரே மேற்படி சம்பவத்தில் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

காட்டு யானை தாக்கியதில் படுகாயமடைந்த இளைஞன், வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும்போது இடைநடுவில் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், உயிரிழந்த இளைஞனின் சடலம் மகியங்கனை வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதோடு மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தெல்லிப்பழை மகளிர் இல்லத்தை மூட முற்பட்டமை கொடுமையான செயல்

## ஆதீன முதல்வர் உள்ளிட்ட சமயத் தலைவர்கள் வேதனை

(யாழ்ப்பாணம்)

பழைமையும் பெருமையும் வாய்ந்த தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம் நடத்தும் மகளிர் இல்லம் (ஆன்மீக விடுதிச் சாலை) ஆதரவற்ற பெண் பிள்ளைகளுக்குக் கிடைத்த பெரும் சொத்து.

அந்த இல்லத்தை மூடுவதற்குச் சிலர் சேர்ந்து தீட்டிய திட்டம் மிகவும் கொடுமையானது.

தவிர, சைவத்துக்கும் தமிழுக்கும் பெரும் தொண்டாற்றிவரும் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களுக்கு களங்கத்தை ஏற்படுத்த முற்பட்டமை மிகவும் வேதனையைத் தருகிறது.

இவ்வாறு நல்லை ஆதீன குருமுதல்வர், நல்லை ஆதீன ஆளுநர் சபையினர், யாழ்ப்பாணம் வேதாந்தமட குரு முதல்வர், கிளிநொச்சி சின்மயா மிசன் சுவாமிகள், கோப்பாய் ஸ்ரீ சுப்பிரமுனிய கோட்ட குரு முதல்வர் ஆகியோர் கூட்டாக விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஓய்வுபெற்ற பெண் அதிபரின் மேற்பார்வையின் கீழ் இயங்கும் தெல்லிப்பழை மகளிர் இல்லத்தைச் சேர்ந்த 28 மாணவிகள் இலங்கை பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பை மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வாறு சிறந்த முறையில் இயங்குகின்ற மகளிர் இல்லத்தை திட்டமிட்டு அழிப்பதற்கு சிலர் முற்பட்டுள்ளனர்.

இல்லத்தின் பாதுகாப்புக்காக பொலிஸாரின் உத்தரவின் பேரில் பொருத்தப்பட்ட கண்காணிப்புக் கமராக்களை வைத்து, அசிங்கமான புனைகதைகளை உருவாக்கி இல்லத்தை மூடுவதற்கு பொறுப்பு வாய்ந்த அரச உத்தியோகத்தர்கள் சிலர் முன்வைத்த போலியான குற்றச்சாட்டுக்களை அடிப்படையாகக் கொண்டு, இல்லத்தை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்க முற்பட்டமை மிகுந்த வேதனையைத் தந்துள்ளது எனத் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை மேற்படி சம்பவத்தைக் கண்டித்து அகில இலங்கை இந்துமா மன்றம், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபை, மன்னார் திருக்கேதீச்சரம் தருமை ஆதீனம் ஸ்ரீமத் மீனாட்சி சுந்தர தம்பிரான் சுவாமிகள், மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய தர்மகர்த்தா சபை உள்ளிட்ட பல அமைப்புகள் கண்டன அறிக்கைகளை வெளியிட்டுள்ளன. (ம-7)

# யாழ்.நகர்ப்பகுதியில் சமூகச் சீர்கேடு

## தடுத்து நிறுத்துமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் முற்றவெளி மற்றும் தபாற் கந்தோர் சுற்று வட்டப் பகுதிகளில் இரவு வேளை களில் சமூகச் சீர்கேட்டு நடவடிக்கைகள் நடைபெறுவதாக பொதுமக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

குறித்த பகுதிகளில் இரவு வேளைகளில் அநாகரிக செயல்களில் ஈடுபடுவதனால் அப்பகுதியில் பயணிக்கும் பொதுமக்கள், வர்த்தகர்கள் பாரிய இடர்பாடுகளை எதிர்நோக்குவதாக தெரிவித்திருக்கின்றனர்.

யாழ்ப்பாணத்தில் மிக முக்கியம் வாய்ந்த பகுதியாகக் கருதப்படும் குறித்த பகுதியில் சமூகச் சீர்கேடு நடைபெறுவதை பொலிஸார் உடன் தடுத்து நிறுத்த வேண்டும் எனவும் வெளி மாவட்டங்களுக்கான பிரதான போக்குவரத்து நடவடிக்கைகள் குறித்த இடத்திலிருந்து ஆரம்பிப்பதனால் இது தொடர்பில் அதிகாரிகள் அதிகம் அக்கறை எடுக்க வேண் டும் எனவும் பொது மக்கள் கோருகின்றனர். (க-6)

# பாணாவிடைச் சிவனுக்கு மஹா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு பாணாவிடைச் சிவன் கோவில் பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

இதன்படி எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வானது நாளை மறுதினம் 11 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை இடம்பெறும். மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 8.23 மணி முதல் 10.18 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் மஹா கும்பாபிஷேகம் இடம்பெறவுள்ளது. (க-6)

# வங்காலை கடற்கரையில் 80 மூடை பீடி இலைகள் பறிமுதல்

## மூவர் கைது



(மன்னார்)

வங்காலை கடற்கரையில் இருந்து பீடி இலைகள் கொண்ட பொதிகள் வாகனம் ஒன்றில் ஏற்ற முற்பட்ட வேளை மன்னார் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளதோடு மூன்று சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வங்காலை கடற்கரையில் வைத்து பீடி இலைகள் கொண்ட பொதிகள் ஏற்றப்படுவதாக கடற்படையினர் மன்னார் மாவட்டக் குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாருக்கு வழங்கிய தகவலுக்கு அமைய குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது 80 மூடைகளில் பொதி செய்யப்பட்ட 2 ஆயிரத்து 888 கிலோ பீடி இலைகள் மீட்கப்பட்டதோடு மன்னார் பகுதியைச் சேர்ந்த 3 நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட பீடி இலை மூடைகள், வாகனம் மற்றும் கைதான 3 சந்தேகநபர்களும் வங்காலை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். பொலிஸ் விசாரணைகளின் பின்னர் கைது செய்யப்பட்ட நபர்களையும் மீட்கப்பட்ட பொருட்களையும் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த உள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (க-6-285)

## கிழவன்காடு கலாமன்றத்தின்

# மாணிக்கவாசகர் குருபூசை

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கிழவன் காடு கலாமன்றம் நடத்தும் மாணிக்கவாசகர் குருபூசை நிகழ்வு இன்று மாலை 4 மணிக்கு காரைநகர் கிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் செஞ்சொற் செல்வர் இரா. செல்வவடிவேலின் "அழுது அடி அடைந்த அன்பர்" என்ற தலைப்பில் சொற்பொழிவு, இசைக்கச்சேரி, நாட்டியாஞ்சலி, வில்லிசை மற்றும் மூதறிஞர் கலாநிதி வைத்தீஸ்வரக் குருக்கள் ஞாபகார்த்தமாக நடைபெற்ற திருவாசக மனனப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசில், சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இடம்பெறும்.

இந்நிகழ்வுக்கான இலவச போக்குவரத்து சேவை கலா மன்ற யாழ் கிளையிலிருந்து மாலை 4 மணிக்கு ஆரம்பமாகும் என ஏற்பாட்டுக் குழு அறிவித்துள்ளது. (க-6)



மக்கள் வங்கியின் 63 ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு இலங்கை வங்கி ஊழியர் சங்கம் நடத்திய இரத்ததான முகாம் நேற்று முன்தினம் யாழ்.ஸ்ரான்லி வீதிக்கிளையில் உள்ள மக்கள் வங்கி கிளையில் இடம்பெற்றது. இதன்போது குருதிக்கொடை முகாம் நிகழ்வில் கலந்து கொண்ட கொடையாளர்களுக்கு சான்றிதழ்களும் பரிசுப் பொருட்களும் வழங்கி வைக்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சம்பளம் அதிகரிப்...

சேரி செயலாளர் மகிந்த சிறிவர்தன தெரிவித்துள்ளார்.

அரச சேவை தொழிற்சங்கங்கள் முன்வைத்த கோரிக்கைகள் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலில் அவர் இதனை தெரிவித்தார்.

இதேவேளை தற்போதுள்ள வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டின் அடிப்படையில் இவ்வருடம் சம்பள அதிகரிப்பை வழங்க முடியாது எனவும், அரச சேவையில் நிலவும் சம்பள முரண்பாடுகள் தொடர்பில் ஆராய நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் பரிந்துரைகளை கருத்திற்கொண்டு திருத்தம் மேற்கொள்ளவுள்ளதாக திறைசேரி செயலாளர் தெரிவித்துள்ளார்.

மேலும் 2025ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் அரச சேவையாளர்களின் சம்பளம் வலியுறுத்தப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## மக்களின்...

யில் அமையும் என்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

குறித்த விடயம் தொடர்பாக சுகாதார அமைச்சர் ரமேஸ் பத்திரன மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் பி.எம்.எஸ்.சார்ள்ஸ் ஆகியோருடனான கலந்துரையாடலில் இதனை வெளிப்படுத்தினார்.

மேலும், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சுமுகமான சூழலை ஏற்படுத்துவதற்கு, குறித்த வைத்தியசாலையின் பதில் வைத்திய அத்தியட்சகராக நியமிக்கப்பட்டுள்ள வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனாவுக்கு விடுமுறை வழங்குவதுடன், பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ள வைத்தியர்களை மீளவும் கடமைக்கு திரும்பச் செய்து வைத்தியசாலையின் செயற்பாடுகளை முதற் கட்டமாக ஆரம்பிப்பது.

பின்னர், விசாரணைக் குழு ஒன்றினை நியமித்து, வைத்தியசாலையில் காணப்படும் குறைபாடுகள், அவை நீண்ட காலமாக நிவர்த்தி செய்யப்படாமைக்கான காரணம் மற்றும் வைத்தியர் அர்ச்சுனா தொடர்பில் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் போன்றவை தொடர்பாக விரிவான விசாரணைகளை மேற்கொள்வது, அதனடிப்படையில் இறுதித் தீர்மானத்தினை மேற்கொள்ளுவது தொடர்பாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் இதன்போது தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,33)

## அதிபர்...

தீர்வுகளை வழங்கக்கோரி இந்த தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த தொழிற்சங்க நடவடிக்கையால் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்படும் அபாயம் நிலவுகிறது. (ம-7)

## கல்வி...

யில் 200 இற்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்கள் இன்றும் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுத்து வரும் நிலையில் இப்போராட்டத்தில் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் இன்று செவ்வாய்க்கிழமை கலந்து கொள்ளவுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் அரச பாடசாலைகள் அனைத்தும் இன்று வழமை போல் இயங்கும் என கல்வி அமைச்சு விசேட அறிவிப்பை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## கொழும்புக்கு...

சாவகச்சேரி வைத்தியசாலையில் இருந்து இடமாற்றும் முயற்சிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, வைத்தியசாலை முன்பாக நேற்று முன்தினம் இரவு ஆரம்பித்த கண்டன ஆர்ப்பாட்டம் அதிகளவிலான மக்களின் பங்கேற்புடன் தொடர்ச்சியாக நேற்றும் முன்னெடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோருடன் கலந்துரையாடிய வைத்தியர் அர்ச்சுனா, தானே தற்போதும் வைத்திய அத்தியட்சகர் எனவும் தற்போது சுகவீன விடுமுறையில் இருப்பதாகவும், குறித்த நிலைமை தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக கொழும்புக்குச் செல்வதாகவும் தெரிவித்து விட்டு வெளியேறினார்.

இது தொடர்பாக பதில் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனா பொதுமக்களிடம் கருத்துத் தெரிவிக்கையில்,

வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் என்னை வைத்தியசாலையை விட்டு வெளியேறுமாறே கூறியுள்ளார்.

ஆனால் இவ் விடயம் தொடர்பாக பாராளுமன்றில் பேசி முடிவெடுக்கப்படவுள்ள நிலையிலும் என்னோடு பேச்சுவார்த்தை ஒன்றை நடத்தும் முகமாகவுமே என்னை கொழும்பிற்கு அழைத்துள்ளனர்.

நான் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் பதில் வைத்திய அத்தியட்சகராகவே கொழும்பு சென்று வரவுள்ளேன்.

ஆனால் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தானே வைத்திய அத்தியட்சகர் எனத் தெரிவிக்கின்றார். அந்த முடிவை நீதிமன்றம்தான் எடுக்க வேண்டும்.

தற்போதும் சட்டப்படி நானே பதில் வைத்திய அத்தியட்சகர். எனவே மக்கள் பதற்றமடையவோ, குழப்பமடையவோ தேவையில்லை. மக்கள் என் மீது வைத்த அன்புக்கு நன்றி. மீண்டும் வருவேன் என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

வைத்தியர் அர்ச்சுனாவின் உறுதிமொழியை ஏற்ற பொதுமக்கள் வைத்தியரை வழியனுப்பிய துடன் போராட்டத்தை நிறைவுக்கும் கொண்டு வந்திருந்தனர். (ம-7,30,33)

## துப்பாக்கிச்சூடு...

களுக்குள்ளனான "க்ளப் வசந்த" என அழைக்கப்படும் சுரேந்திர வசந்த பெரேரா மற்றும் மேலும் ஒருவர் உயிரிழந்துள்ளனர்.

(முன்னர் கிடைத்த செய்தி உள்ளே)


நாக அதிஷ்ட சுரபி
கனகலிங்கம் திலகவதி NLB/DLB
NLB யின் அதசம்பத லொத்தரில் கனகலிங்கம் திலகவதி மூலம் 08.07.2024 அன்று முதல் பரிசாக 2.5 லட்சம் ரூபாய் வெல்லப்பட்டுள்ளது
இன்றே விரையுங்கள் யாழ்.நகரப்பகுதி லொத்தர் கூடுகளுக்கு
நயினையில் தொடரும் அமுத சுரபி
யாழில் தொடரும் அதிஷ்ட சுரபி
(C-762)
077 603 1723

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2024.07.08
சீட்டிழுப்பு இலக்கம் 5528
L 7 2 8 1 0 5
அத சம்பத
L 8 1 0 5
சீட்டிழுப்பு இலக்கம் 103

தன நிதானய
திகதி - 2024.07.08
சீட்டிழுப்பு இலக்கம் - 1558
N 11 19 28 73 N
Double Chance 47684

மெகா பவர்
திகதி 08/07/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1876
R 07 03 64 70 76
53597

லக்ஸ் 7 VIP
திகதி 2024.07.08
சீட்டிழுப்பு இலக்கம் 354
Z 9 3 0 3 0 8 Z

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3770
சீட்டிழுப்பு திகதி 08.07.2024
B 03 27 45 75
B 94300

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.07.08
சீட்டிழுப்பு இலக்கம் 0837
மீனம் 10 12 25 44 மீனம்
36956 16

உத்தியோகபூர்வ முடிவுகள்
08.07.2024 வெற்றி வாரம் 236 வர்ணம் ஊதா
Z 1 1 5 2 9 1
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.21,200,708.00
57503
DLB வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2502 வர்ணம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 08.07.2024 தினம் திங்கள்
16 56 57 73 P
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 97,665,100.80

சனிதா
திகதி 2024.07.08 வெற்றி வாரம் 4663 வர்ணம் இளம் நீலம்
12 16 21 59 C
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.64,492,479.20
செகண்ட் சான்ஸ் விசேட இல. ரூ.100,000/- பணப்பரிசு 74374

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4214 வர்ணம் மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2024.07.08 தினம் திங்கட்கிழமை
05 31 52 57 கன்னி
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,794,499.60
612699

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
T 09 05 51 63 69
சீட்டிழுப்பு வாரம் 1678 வர்ணம் பச்சன் திகதி 08.07.2024 திங்கள்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 531,988,949.00

ஜயோதா Jayoda
திகதி 2024.07.08 வெற்றி வாரம் 2040 வர்ணம் செம்மஞ்சள்
33 39 40 44 D
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.24,253,031.20
www.dlb.lk

ADA KOTIPATHI
திங்கட்கிழமை
வெற்றி வாரம் : 2328
சீட்டிழுப்பு திகதி : 2024.07.08
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.126,229,506.40
37 58 59 75 B
866753


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி...

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் பணிப்பாளராக வைத்தியர் காண்டீபன் நியமிக்கப்பட்டு பின்னர் அவர் மேற்படிப்பிற்காக வெளிநாடு சென்றிருந்த நிலையில் மத்திய சுகாதார அமைச்சின் செயலாளரால் பதில் வைத்திய அத்தியட்சகராக வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனா நியமிக்கப்பட்டிருந்தார்.

பதில் அத்தியட்சகர் அர்ச்சுனா நியமனம் கிடைத்து ஓரிரு நாட்களிலேயே சடுதியாக வைத்தியசாலையில் பல மாற்றங்களை ஏற்படுத்தியிருந்தார்.

இந்த முடிவு வைத்தியசாலையின் ஒரு சில வைத்தியர்களுக்கு ஏற்புடைய தாக தென்படாமையால் பதில் வைத்திய அத்தியட்சகருடன் முரண்பாடு ஏற்பட்டிருந்தது. இந்த முரண்பாடு வளர்ந்து கடந்த நான்கு தினங்களாக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் வைத்தியர்கள் மருத்துவ சேவையில் இருந்து விலகியிருந்தனர்.

மேலும் பதில் வைத்திய அத்தியட்சகரான வைத்தியர் அர்ச்சுனாவை மாற்றி புதிய பதில் வைத்தியரை நியமிப்பதற்கான பெரு முயற்சியில் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் ஈடுபட்ட நிலையில் பொதுமக்கள் நேற்று திங்கட்கிழமை வர்த்தக நிலையங்களை மூடியதுடன்-வைத்தியசாலை முன்பாக பாரிய ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது வீதிமறியல் போராட்டத்திலும் பொதுமக்கள் ஈடுபட்டமையால் சில நிமிடங்கள் ஏ9 வீதி ஊடான போக்குவரத்தும் தடைப்பட்டிருந்தது.

இதன்போது பொதுமக்கள் 5 நாட்களாக கடமையில் இருந்து விலகிய வைத்தியர்கள் வேண்டாம். வைத்தியர் அர்ச்சுனா எமக்கு வேண்டும் மருத்துவ மாபியாக்களை வெளியேற்று அரச வைத்தியசாலையில் நியமனம் பெற்றுவிட்டு தனியார் வைத்தியசாலையில் கடமைபுரியும் வைத்தியர்களை வெளியேற்று. நோயாளர்களின் நலன் கருதாது சுயநலமாக செயற்பட்ட வைத்தியர்களை இடமாற்று போன்ற கோஷங்களை எழுப்பியிருந்தனர்.

ஆயிரக்கணக்கான பொதுமக்கள் ஒன்றுகூடி வைத்தியர் அர்ச்சுனாவிற்காக ஆதரவளித்து போராடிவரும் நிலையில் விசேட அதிரடிப் படையினர், கலகம் அடக்கும் பொலிஸார் என ஏராளமான பாதுகாப்புத் தரப்பினர் குவிக்கப்பட்டிருந்தனர். (ம-7,30,33)

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-760)
076 825 7716 (ஆகாஸ்)

JV Language Centre
Station Road, Chunnakam
புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன
பதிவுத்திகதி 10 JULY 2024 தொடக்கம் 25 JULY 2024
IELTS Life Skills A1
Student Visa, Work Visa
London (UK), Canada and Australia
தொடர்பு கொள்ள: 0777 291 307 or 0773 743 404 (1415)

கடை வாடகைக்கு உண்டு
சாவகச்சேரி இந்துக்கல்லூரிக்கு
அருகாமையில் A9 பாதையோரமாக
சகல வசதிகளுடனும் கூடிய புதிய
இயங்கு நிலையிலுள்ள
உணவகம் வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 077 926 5447 (147)

வங்கி மீதி வசதி
(Show money)
சகல நாடுகளுக்குமான
விசாவினை உறுதிப்படுத்திக்
கொள்ள குறைந்த கட்டணத்தில்
வங்கி மீதி வசதிகள்
தொடர்புகளுக்கு:
074 17 37 684 (135)

V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-759)

அனைத்து நாடுகளுக்குமான
விமான பயணச்சீட்டுக்கள்
குறைந்த விலையில்
•Air Ticket Date Change •Travel Insurance
•Online Visa Appoinments •Travel Itinerary
•Sri Lanka Visa Extension
•All Country Visa Services
உங்கள் அருகாமையில் எமது நேரடி கிளைகள்
கொழும்பு | மட்டக்களப்பு | திருகோணமலை | கிளிநொச்சி
புதுக்குடியிருப்பு | கொடிகாமம் | சாவகச்சேரி | புத்தூர்
யாழ்ப்பாணம் | நாச்சிமார் கோவிலடி | பண்டத்தரிப்பு
சுன்னாகம் | மானிப்பாய் | சங்கானை | கோப்பாய்
நெல்லியடி | பருத்தித்துறை | வல்வெட்டித்துறை
V2 TRAVELS 0768226240 0768226241
(C-759)

Care Giver - பராமரிப்பாளர்
கனடா, அமெரிக்கா, ஜேர்மனி
போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை
பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma
கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள
நிரந்தரகுடியுரிமையுடனான 15'000
Care Giver வாய்ப்புக்களுக்கான
சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன்
Care Giver கற்கை நெறி மற்றும்
Immigration Services - விசா சேவைகள்.
(இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்)
CIMS College
49A, Chapel Street, Jaffna.
(C-759)
College Of International Migration Skills
0777 068 777 / 077 7719 322

வேலையாட்கள் தேவை
யாழ்ப்பாணத்தில் இயங்கும் P.P.T
நிறுவனத்திற்கு முகாமையாளர், bus
booking, பார்சல் வேலை
போன்றவற்றுக்கு வேலையாட்கள்
தேவைபடுகின்றன. தங்கி நின்று வேலை
செய்பவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு: B.S.JUD
077 386 6250
077 573 1318 (1420)

# மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
| --- | --- |
| 25 - 06 - 1941 | 07 - 07 - 2024 |



## கந்தையா பாலசுப்பிரமணியம் (Dr. பாலா)

இணுவில் மேற்கு இணுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைத்தியர் கந்தையா பாலசுப்பிரமணியம் அவர்கள் கடந்த 07.07.2024 காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - தங்கம்மா தம்பதிகளின் புதல்வனும் காலஞ்சென்ற தில்லையம்பலம் - ஆச்சியம்மா தம்பதிகளின் மருமகனும் லில்லிமலர்(பவளம்) அவர்களின் பாசமிகு கணவரும் Dr.தினகரன்(பொறுப்பு வைத்திய அதிகாரி - பிரதேச வைத்தியசாலை, அச்சுவேலி), லோகானந், கிருஷாந்தி, மாதுரி ஆகியோரின் பாசமிகு தந்தையும் கிரிகரன், லம்போதரன், அம்பாலிகா, பாமிலா ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்றவர்களான இரத்தினபூபாலன்(ஓய்வு பெற்ற அதிபர்), அருணகிரிநாதன் மற்றும் அருட்சோதி(கனடா) ஆகியோரின் சகோதரனும் ஜானுஜன், திவ்ஜா, நாகபூஷணி, விஷ்றுதா ஆகியோரின் பேரனும் ஆவார்

அன்னாரின் ஈமைக்கிரிகைகள் (09.07.2024) இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

செட்டிவளவு வீதி,
இணுவில் மேற்கு, இணுவில் (1418)

தகவல் :
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 23 - 05 - 1978 | 08 - 07 - 2024 |



## திருமதி மன்மதராசன் சாரதா

ஊரெழு கிழக்கு வளர்பிறையைச் சேர்ந்த திருமதி மன்மதராசன் சாரதா அவர்கள் நேற்று (08.07.2024) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற க.சின்னத்துரை மற்றும் பூரணம் தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியும் காலஞ்சென்றவர்களான சி.இளையகுட்டி - இலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகளும் மன்மதராசனின் (மன்னன்) பாசமிகு மனைவியும் அகல்யா (மாணவி, A/L உயிரியல் பிரிவு 2024 - யாழ் இந்து மகளிர் கல்லூரி), அபிஷேக் (மாணவன், A/L உயிரியல் பிரிவு 2026 - யாழ் இந்துக் கல்லூரி) காலஞ்சென்ற அட்ஷயன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் பாலு, பவானி, ரஞ்சினி, ரஜனி(சுவிஸ்), சைமினி(கனடா), ரஞ்சன்(லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் இந்திரா, காலஞ்சென்ற யோகதுரை (ராசா), கைலயங்கிரிநாதன், ஜெயப்பிரதாபன் (ஜெயம், சுவிஸ்), செல்வராசா (கனடா), குகாந்தினி (லண்டன்), தங்கராணி, தர்மகுலசிங்கம், சந்திரா (பிரான்ஸ்), ராதா ஆகியோரின் மைத்துனியும் தங்கராசா, சாந்திநிதி, தவராஜா (VTR) (பிரான்ஸ்), துயாநந்தினி ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரிகைகள் (09.07.2024) இன்று செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பகல் 11 மணிக்கு புன்னாலைக்கட்டுவன் விலங்கன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

வளர்பிறை,
ஊரெழு கிழக்கு.

077 615 2390
077 468 3321 (C-0761)

தகவல் :
குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் [illegible] என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.07.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org